# தின பூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 210 ஆனி 23 | Regd. No.CBE/090/2011-2013

கோவை, திங்கள், ஜூலை 07, 2025 | ▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**'அமெரிக்கா கட்சி' பெயரில் புதிய அரசியல் கட்சியை தொடங்கினார் எலான் மஸ்க்**

...2-ம் பக்கம்

**அரசு பங்களாவை காலி செய்யாதது ஏன்? முன்னாள் நீதிபதி விளக்கம்**

...3-ம் பக்கம்

**இங்கி.க்கு எதிரான 2-வது டெஸ்ட்: ஆகாஷ் தீப் பந்து வீச்சில் இந்திய அணி அபார வெற்றி**



...6-ம் பக்கம்



● திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் இன்று நடைபெறவுள்ள மகா குபாபிஷேகத்தை முன்னிட்டு கோவில் ராஜகோபுரம் மற்றும் கோவில் வளாகம் முழுவதும் வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஜொலிக்கும் காட்சி.

### முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான

# திருச்செந்தூர் கோவிலில் இன்று மகா கும்பாபிஷேகம்

*** லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர்**
*** பாதுகாப்பு பணியில் 6 ஆயிரம் போலீசார் குவிப்பு**

திருச்செந்தூர், ஜூலை 07-

**திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மகா கும்பாபிஷேக விழா இன்று (திங்கட்கிழமை) கோலாகலமாக நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ள அங்கு லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர். பாதுகாப்பு பணிக்கு 6 ஆயிரம் போலீசார் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு நடைபெறுகிறது.**

**யாகசாலை மண்டபத்தில்**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மகா கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு ராஜகோபுர அடிவாரத்தில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள யாகசாலை மண்டபத்தில் கடந்த 1-ம் தேதி முதல் யாகசாலை பூஜைகள் தொடங்கியது. தினமும் காலை, மாலை என ஒவ்வொரு கால யாகசாலை பூஜைகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 2 நாட்களாக தங்க முலாம் பூசப்பட்ட சுவாமி மூலவர், சண்முகர், வள்ளி, தெய்வானை உள்பட விமான கோபுர கலசங்கள் விமானதளத்திற்கு கொண்டு வரப்பட்டு, அதில் வரகு நிரப்பப்பட்டு மீண்டும் அந்தந்த சுவாமி விமானத்தில் பொருத்தப்பட்டன.



**ட்ரோன் மூலம் புனிதநீர் தெளிப்பு**

**திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 6:15 முதல் 6:50 மணிக்குள் நடக்கிறது. 10 லட்சம் பக்தர்கள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. கும்பாபிஷேகத்தில் பங்கேற்கும் பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்படுவது வழக்கம். இந்த முறை ட்ரோன் மூலம் புனிதநீர் தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான சோதனை ஓட்டம் நடந்தது. மொத்தம், 20 இடங்களில் பெரிய அளவிலான ட்ரோன் கொண்டு பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்படுகிறது.**

**மகா தீபாராதனை...**

நேற்று முன்தினம் காலை 8-ம் கால யாகசாலை பூஜை, மாலையில் 9-ம் கால யாகசாலை பூஜை, மகா தீபாராதனை நடந்தது. இதுதவிர மாலையில் சுவாமி பெருமாளுக்கு முதல் கால யாகசாலை பூஜை தொடங்கியது. சுவாமி சண்முகர் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு நேற்று காலை 10-ம் கால யாகசாலை பூஜை நடைபெற்றது. தொடர்ந்து மாலையில் 11-ம் கால யாகசாலை பூஜையும் நடக்கிறது. இன்று (திங்கட்கிழமை) அதிகாலை 12-ம் கால யாகசாலை பூஜை நடக்கின்றது. காலை 6.15 மணிக்கு மேல் 6.50 மணிக்குள் ராஜகோபுரம் கும்ப கலசங்களுக்கு மகா கும்பாபிஷேகம் நடக்கிறது.

**தடுப்பு வேலிகள்...**

### விருதுநகர் அருகே பட்டாசு ஆலை விபத்தில்

# உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு 4 லட்சம் ரூபாய் நிவாரண நிதி

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு**

விருதுநகர், ஜூலை 07-

**விருதுநகர் அருகே பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்த பாலகுருசாமி குடும்பத்துக்கு ரூ.4 லட்சம் நிவாரணம் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு ரூ.1 லட்சம், லேசான காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000 நிவாரணம் வழங்கவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார். பாலகுருசாமி குடும்பத்துக்கும், அவரது உறவினர்களுக்கும் முதல்வர் இரங்கல் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்; "விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெற்றிலையூரணி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (06.07.2025) காலை சுமார் 8.45 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சிவகாசி வட்டம், திருத்தங்கல், பனையடிபட்டி தெருவைச் சேர்ந்த பாலகுருசாமி (வயது 50) த/பெ.மூக்கையா என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிவகாசி வட்டம், தாயில்பட்டி, லட்சுமி நகரைச் சேர்ந்த திரு. கண்ணன் (வயது 50) மற்றும் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை வரும் சாத்தூர் வட்டம், படந்தால், நடுத்தெருவைச் சேர்ந்த ராஜபாண்டி (வயது 37), சிவகாசி வட்டம், தாயில்பட்டி, பசும்பொன் நகரைச் சேர்ந்த ராஜசேகர் (வயது 29), ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த கமலேஷ் ராம் (வயது 28) மற்றும் ரமேஷ் (வயது 20) ஆகிய ஐந்து நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு லட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

### வரும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு

# முதல் கட்டமாக இ.பி.எஸ். இன்று முதல் சுற்றுப்பயணம்

சென்னை, ஜூலை 07-

**அடுத்தாண்டு சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று முதல் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதன்படி, கோவை, மேட்டுப்பாளையத்தில் இருந்து தனது பிரசாரத்தை அவர் தொடங்குகிறார்.**



கோவையில்ம் காலை 9 மணியளவில் மேட்டுப்பாளையம் தொகுதி தேக்கம்பட்டியில் அமைந்துள்ள வனப்பத்திரகாளியம்மன் கோயிலில் தரிசனம் செய்யவுள்ளார். இதனைத் தொடர்ந்து, 10.30 மணியளவில் விவசாயிகளைச் சந்தித்து பேசவுள்ளார். அடுத்ததாக, பிளாக் தண்டர் செல்லும் எடப்பாடி பழனிசாமி, மாலை 4.35 மணியளவில் பிளாக் தண்டர் முதல் ஊட்டி சாலை காந்தி சிலை வரையில் ரோடு ஷோவும் செல்கிறார்.

இறுதியாக, மேட்டுப்பாளையம் பேருந்து நிலைய சந்திப்புக்கு அவர் செல்கிறார். மேற்குறிப்பிட்ட 5 இடங்களிலும் மக்களைச் சந்தித்து, பிரசார வாகனத்தில் இருந்தவாறே எடப்பாடி பழனிசாமி உரையாற்றவுள்ளார்.

மேட்டுப்பாளையத்தில் பரப்புரையை தொடங்கும் இபிஎஸ் ஜூலை 23ல் பட்டுக்கோட்டையில் நிறைவு செய்கிறார். எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நிலையில் அவருக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது.

எடப்பாடி பழனிசாமி 33 சட்டமன்றத் தொகுதிகளுக்குச் சென்று பரப்புரை மேற்கொள்ளவுள்ளார்.

முன்னதாக நேற்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழக மக்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

என் உயிருக்கு நெருக்கமான உறவாக இருக்கின்ற உங்களோடு இருக்கவே நான் எப்போதும் ஆசைப்படுபவன். சாமானியனிலும் சாமானியனாக உங்களோடு கலந்து உறவாட விரும்புகிறவன். தமிழ்க்குடியினர் அனைவரும் தலைநிமிர்ந்து செம்மாந்து வாழ்வதற்கு எனது செயல்கள் அனைத்தையும் அர்ப்பணிக்க நினைப்பவன்.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் அமைத்துக் கொடுத்த லட்சியப் பாதையில் தமிழ்நாட்டை வழி நடத்த வேண்டும் என நித்தமும் உழைப்பவன். எனது தனிப்பட்ட வாழ்வும் அரசியல் வாழ்வும் வெவ்வேறானவை அல்ல. அவை ஒன்றோடு ஒன்று கலந்தவை என்பதை எனது நெஞ்சகத்தை அறிந்தவர்கள் நன்கு அறிவார்கள். 'மக்களைக் காப்போம்-தமிழகத்தை மீட்போம்' என்கிற எழுச்சிப் பயணத்தில் உங்களை எல்லாம் சந்தித்து உறவாட வருகிறேன்.

இந்தப் புரட்சிப் பயணத்தில் உங்களை எல்லாம் எழுச்சிமிக்கவர்களாக மாற்றுவது மட்டுமே எனது நோக்கம். வெற்றிகரமான ஒரு தமிழ்நாட்டை மீண்டும் உருவாக்குவதே எனது இந்தச் சுற்றுப் பயணத்தின் லட்சியம். உங்கள் வீட்டுப் பிள்ளையாக, உங்களோடு உறவாடி நிற்பேன்.

உங்கள் குறைகளையும் கோரிக்கைகளையும் காதுகொடுத்துக் கேட்கும் சேவகனாக இருப்பேன். தமிழ்நாட்டு மக்களைத் தேடி வரும் இந்த எழுச்சிப் பயணம், உங்கள் பங்களிப்போடு ஒரு மாற்றத்தை நோக்கிய வெற்றிப் பயணமாக மாறும் என்பதில் எள் முனையளவும் எனக்கு சந்தேகமில்லை.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# மகளிர் உரிமைத்தொகை பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

**சென்னை, ஜூலை 07-**

**மகளிர் உரிமைத் தொகை பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.**

**தமிழகத்தில் சுமார் ஒரு கோடியே 15 லட்சம் பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் மூலம் மாதம்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் விடுபட்ட பெண்களை சேர்க்க அடுத்த மாதம் 15-ந்தேதி தொடங்க உள்ள உங்களுடன் ஸ்டாலின் என்ற நிகழ்ச்சி மூலம் விண்ணப்பம் பெறப்பட உள்ளது என தெரிவிக்கப்பட்டது.**

**இந்தநிலையில்மகளிர்உரிமைத்தொகை பெறஇன்றுமுதல்விண்ணப்பங்கள்வீடு வீடாக வினியோகிக்கப்பட உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.'உங்களுடன்ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் உள்ள தன்னார்வலர்கள் மூலம் விண்ணப்பம் வழங்கத் திட்டம் எனவும் 3 மாதங்களுக்கு நடைபெறும் பணியில் சுமார் 1 லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுவர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.**

# பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வு இன்று தொடக்கம்

**சிறப்பு பிரிவினருக்கு நடைபெறுகிறது**

சென்னை, ஜூலை 07-

**2025-2026 கல்வி ஆண்டுகான பொறியியல் படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கு கலந்தாய்வு இன்று தொடங்குகிறது. முதலில் சிறப்பு பிரிவினருக்கு இணைய வழியில் இன்றும், நாளையும் நடைபெறுகிறது.**

தமிழகத்தில் 440-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இதில், அண்ணா பல்கலைக்கழக துறை கல்லூரிகள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள், தனியார் சுயநிதி கல்லூரிகள் என அனைத்து வகை பொறியியல் கல்லூரிகளும் அடங்கும். இந்த கல்லூரிகளில் பி.இ., பி.டெக் படிப்பில் ஏறத்தாழ 2 லட்சம் இடங்கள் பொது கலந்தாய்வு முறையில் நிரப்பப்படும். இந்தக் கலந்தாய்வை தமிழ்நாடு அரசு சார்பில் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

இந்த சூழலில் வரும் கல்வி ஆண்டு (2025-2026) பி.இ., பி.டெக் சேர்க்கைக்கான கலந்தாய்வுக்கான இணையவழி விண்ணப்பப் பதிவு கடந்த மே 7ம் தேதி தொடங்கியது. இதையடுத்து பொறியியல் படிப்புகளில் சேர ஆர்வமுள்ள மாணவர்கள் https://www.tneaonline.org. என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து வந்தனர். இந்நிலையில் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான சிறப்பு பிரிவு கலந்தாய்வு இணைய வழியில் இன்று தொடங்குகிறது.

இதன்படி பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு இன்று (திங்கட்கிழமை) தொடங்கி ஆகஸ்ட் 26-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்த ஆண்டு 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கான அரசு ஒதுக்கீடு 7.5 விழுக்காட்டின் கீழ் 51,004 பேர் பொறியியல் கலந்தாய்வுக்காக விண்ணப்பித்திருந்தார்கள். இதில் பள்ளிக்கல்வத்துறையால் வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் 47,372 மாணவர்களுக்கு தரவரிசை எண் வழங்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை சென்ற ஆண்டை விட 15,149 கூடுதலாகும். இந்த 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் கீழுள்ள சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு, இன்று (ஜூலை 7ம் தேதி) மற்றும் நாளை (8-ம் தேதி) நடைபெற உள்ளது.

பொது பிரிவினருக்கான சிறப்பு இட ஒதுக்கீடு கலந்தாய்வு ஜூலை 9-ஆம் தேதி முதல் 11ஆம் தேதி வரை நடைபெறுகிறது. பொது கலந்தாய்வு ஜூலை 14ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 19ஆம் தேதி வரை நடைபெறுவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. துணை கலந்தாய்வு ஆகஸ்ட் 21-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை நடைபெறும் நிலையில், ஆகஸ்ட் 26-ம் தேதியுடன் நிறைவடைகிறது. ஆன்லைன் கலந்தாய்வு மற்றும் அது தொடர்பான விவரங்களை அறிய www.tneaonline.org என்ற இணையதளத்தை மாணவர்கள் பார்வையிடலாம். பொறியியல் படிப்பிற்கான தரவரிசை பட்டியலில் கடந்த ஆண்டு 64 மாணவர்கள் 200 கலந்தாய்வு மதிப்பெண் பெற்றிருந்த நிலையில், நடப்பாண்டில் 144 மாணவர்கள் முழு மதிப்பெண்களைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 2,299 கிராம உதவியாளர் பணிக்கு அரசு அறிவிப்பாணை வெளியீடு

சென்னை, ஜூலை 07-

**காலியாக உள்ள 2,299 கிராம உதவியாளர் பணியிடங்கள் நிரப்ப வேண்டும் என தமிழக அரசு அறிவித்து அரசாணை வெளியிட்டுள்ளது.**

இதுதொடர்பாக வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது : வருவாய்துறையில் 3 ஆண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள கிராம உதவியாளர்களின் பணியிடங்களை சிறப்பு கால முறை ஊதியம் ரூ.11,100 – ரூ.35,100 என்ற ஊதியகட்டின் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டங்கள் வாரியாக மொத்தம் 2299 பணியிடங்களில் காலியாக உள்ளது.

அதன்படி திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில் 3 ஆண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள 102 கிராம உதவியாளர்கள் பணியிடங்கள் மட்டும் நிரப்பிட உத்தரவிடப்பட்டுள்ளது.


மேலும் இதற்கான விண்ணப்பிப்போர் இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் விண்ணப்பதாரர் 21 வயது நிறைவு செய்து அந்த வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும். பணிக்கான விண்ணப்ப படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவண இணைப்புகளுடன் சமபந்தப்பட்ட வட்டாட்சியருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அளித்து விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**


| BSE | NSE |
|---|---|
| 193.42 | 55.70 |
| பாயின்ட் 83,432.89 | பாயின்ட் 25,461.00 |




**தங்கம்** 1 சவரன் ₹72,480 — 1 கிராம் ₹9,060



**வெள்ளி** 1 கிலோ ₹120,000 — 1 கிராம் ₹120.00





**டாலர்** ₹85.50

**பெட்ரோல்** ₹102.63 — **டீசல்** ₹94.24



## 'அமெரிக்கா கட்சி' என்ற பெயரில்
# புதிய அரசியல் கட்சியை தொடங்கினார் எலான் மஸ்க்

**வாஷிங்டன், ஜூலை 07-**

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்புடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ள நிலையில், அமெரிக்கா கட்சி என்ற புதிய கட்சியை எலான் மஸ்க் தொடங்கியுள்ளார்.

"அமெரிக்க மக்களுக்கு மீண்டும் சுதந்திரத்தை கொடுப்பதற்காக அமெரிக்கா கட்சியை தொடங்கி உள்ளோம். நமது தேசத்தை வீண் செலவு மற்றும் ஊழல் மூலம் திவால் செய்கின்றனர். இதை பார்க்கும்போது நாம் ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் இல்லாமல் ஒரு கட்சி முறையின் கீழ் தான் வாழ்கிறோம் என்பது தெரிகிறது" என தனது எக்ஸ் தளத்தில் மஸ்க் கூறியுள்ளார்.



முன்னதாக, எக்ஸ் தளத்தில் அமெரிக்க சுதந்திர தினத்தன்று (ஜூலை 4) 'அமெரிக்க கட்சி' என்ற புதிய கட்சி தொடங்குவது குறித்து மஸ்க் கேள்வி எழுப்பி இருந்தார். 'யெஸ்' அல்லது 'நோ' பாணியில் மேற்கொள்ளப்பட்ட இந்த சர்வேயில் சுமார் 12 லட்சத்துக்கும் மேலானவர்கள் பங்கேற்றனர். அதில் 65 சதவீதம் பேர் 'ஆம்' என்று பதில் அளித்தனர்.

இதையடுத்து, "இரண்டில் ஒருவருக்கு புதிய அரசியல் கட்சி தொடங்க வேண்டும் என கூறியுள்ளனர். அது நிச்சயம் உங்களுக்கு கிடைக்கும்" என சனிக்கிழமை அன்று மஸ்க் உறுதி அளித்திருந்தார். இந்நிலையில், சொன்னபடி அமெரிக்க கட்சியை தொடங்கி உள்ளார். டொனால்டு ட்ரம்ப் அரசு முன்மொழிந்த 'பிரமாண்டமான பட்ஜெட்; அழகான பட்ஜெட்' என்ற மசோதா அமலுக்கு வந்த மறுநாளே அரசியல் கட்சி தொடங்குவேன் என மஸ்க் சொல்லியிருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த மசோதா அண்மையில் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டது.

# மக்களிடையே அன்பு மறைந்து வருகிறது: நிதின் கட்கரி வருத்தம்

**நாக்பூர், ஜூலை 07-**

வல்லரசுகளின் சர்வாதிகாரத்தால் மக்களிடையே அன்பு மறைந்து வருகிறது என மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

மராட்டிய மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை மந்திரி நிதின் கட்கரி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது;- "இஸ்ரேல், ஈரான் மற்றும் ரஷியா, உக்ரைனுக்கும் இடையேயான மோதல்கள் காரணமாக உலகம் முழுவதும் போர் பதற்றம் நிலவி வருகிறது. இதனால் எந்த நேரத்திலும் உலகப் போர் நிகழும் வாய்ப்பு உள்ளது. ஏவுகணைகள் மற்றும் டிரோன்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால் போரின் பரிமாணங்கள் மாறிவிட்டன.

இவை அனைத்திற்கும் மத்தியில், மனிதகுலத்தைப் பாதுகாப்பது கடினமாகிவிட்டது. பெரும்பாலும், பொதுமக்கள் குடியிருப்புகள் மீது ஏவுகணைகள் வீசப்படுகின்றன. இது ஒரு கடுமையான சிக்கலை உருவாக்கியுள்ளது. இந்த பிரச்சினைகள் அனைத்தையும் உலக அளவில் விவாதிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இவை அனைத்தும் மெதுவாக அழிவுக்கு இட்டுச் செல்கின்றன. வல்லரசுகளின் சர்வாதிகாரத்தால் மக்களிடையே ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் மற்றும் அன்பு ஆகியவை மறைத்து வருகின்றன."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பா.ம.க. நிர்வாக குழுவில் இருந்து அன்புமணி நீக்கம்: ராமதாஸ் அதிரடி

**திண்டிவனம்,ஜூலை 07-**

பா.ம.க. தலைமை நிர்வாக குழுவில் இருந்து அன்புமணியை நீக்கம் செய்து ராமதாஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பா.ம.க.வில் தலைமை நிர்வாக குழு செயல்பட்டு வந்தது. இந்த குழுவில் பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், திலகபாமா, பாலு, வெங்கடேஸ்வரன், வடிவேல் ராவணன் உள்ளிட்டவர்கள் தலைமை நிர்வாகிகளாக இடம்பெற்று இருந்தனர்.

இந்த சூழலில் பா.ம.க.வில் தற்போது நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மற்றும் தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் இடையே நிலவும் கருத்து மோதல் போக்கு காரணமாக நிறுவனர் ராமதாஸ் தலைமை நிர்வாக குழுவை அதிரடியாக கலைத்தார்.

மேலும், 21 புதிய தலைமை நிர்வாக குழு நிர்வாகிகளாக, பொதுச்செயலாளர் முரளிசங்கர், பொருளாளர் சையத் மன்சூர் உசேன், கவுரவ தலைவர் ஜி. கே.மணி, பு.தா.அருள்மொழி, கரூர் பாஸ்கரன், ஏ.கே. மூர்த்தி, அருள் எம்.எல்.ஏ., ஸ்டாலின் உள்ளிட்ட நிர்வாகிகளை டாக்டர் ராமதாஸ் நியமனம் செய்து அறிவித்தார்.

இதையடுத்து, புதிய தலைமை நிர்வாக குழு நிர்வாகிகளுக்கான ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே உள்ள தைலாபுரம் தோட்டத்தில் நடைபெற்றது. இதில் டாக்டர் ராமதாஸ் கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினார். அந்த கூட்டத்தில், ஆகஸ்டு 10-ந்தேதி பூம்புகாரில் நடைபெறும் மகளிர் மாநாடு பணிகள் தொடர்பாக ஆலோசனை நடைபெற்றதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இதனிடையே கூட்டம் முடிந்து வெளியே வந்த வன்னியர் சங்க மாநிலத் தலைவர் பு.தா. அருள்மொழி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில், "இன்று (அதாவது நேற்று முன்தினம்) நடைபெற்ற நிர்வாக குழு கூட்டத்தில் 8-ந்தேதி (செவ்வாய்க்கிழமை) பா.ம.க. மாநில செயற்குழு கூட்டம் ஓமந்தூரில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வருகிற ஆகஸ்டு 10-ந்தேதி பூம்புகாரில் நடைபெற உள்ள மகளிர் மாநாடு பணிகள் குறித்தும், புதிய நிர்வாகிகள் நியமனம், அவர்களது செயல்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் அனைத்து நிர்வாகிகளும் ஒருமித்தமாக டாக்டர் ராமதாஸ் கரத்தை பலப்படுத்துவது என ஒற்றை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இப்போதைய சூழலில் தேர்தல் கமிஷனுக்கு செல்ல வேண்டிய நிலை இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் 3 பேர் அன்புமணியிடம் உள்ளதால் கொறடாவை மாற்ற கோரி மனு அளித்து இருக்கிறார்கள்" என்றார்.

# இஸ்ரேல் ராணுவம் தாக்குதல்: காசாவில் 33 பேர் உயிரிழப்பு

**காசா, ஜூலை 07-**

காசாவில் இஸ்ரேல் ராணுவம் தாக்குதலில் 33 பேர் உயிரிழந்தனர்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இது வரை காசாவில் இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் சுமார் 57 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாக காசா சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக அழிக்கும் வரை போர்நிறுத்தம் ஏற்படாது என இஸ்ரேல் அரசு உறுதியாக தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் ராணுவம் நேற்று காசாவில் சுமார் 100-க்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல்களில் 33 பேர் உயிரிழந்ததாகவும், சுமார் 25 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அதே சமயம், ஹமாஸ் அமைப்பினரின் முகாம்கள், சேமிப்பு கிடங்குகள் ஆகிய இடங்களை குறிவைத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வருமான சமத்துவத்தில் உலக அளவில் 4ம் இடம் பிடித்த இந்தியா

**புதுடெல்லி, ஜூலை 07-**

வருமான சமத்துவத்தின் அடிப்படையில் உலகளவில் நான்காவது நாடாக இந்தியா மாறியுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

வருமான சமத்துவத்துக்கான கினி குறியீட்டில் இந்தியா 25.5 மதிப்பெண்கள் பெற்றுள்ளது. இந்த பட்டியலில் ஸ்லோவாக் குடியரசு 24.1 மதிப்பெண்களும், ஸ்லோவேனியா 24.3 மதிப்பெண்களும், பெலாரஸ் 24.4 மதிப்பெண்களும் பெற்று முதல் மூன்று இடங்களில் உள்ளன.

2011-12 மற்றும் 2022-23 க்கு இடையில் இந்தியாவில் வருமான சமத்துவமின்மை கணிசமாகக் குறைந்துள்ளது. இதனால் உலகளவில் நான்காவது வருமான சமத்துவம் கொண்ட நாடாக இந்தியா மாறியுள்ளது என்று உலக வங்கி அறிக்கை கூறுகிறது. இந்தியாவில் தீவிர வறுமை விகிதம் பெரிய அளவில் குறைந்ததே, வருமான சமத்துவமின்மை குறைய காரணமாகியுள்ளது. இந்தியாவில் தீவிர வறுமை விகிதம் 2011-12ல் 16.2% லிருந்து 2022-23 இல் 2.3% ஆகக் குறைந்துள்ளது என்று உலக வங்கியின் தரவுகள் தெரிவித்துள்ளன.

சமத்துவத்தின் அளவீடான சிறந்த கினி குறியீட்டு மதிப்பெண்களில், சீனா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளை விட இந்தியா மிகவும் சிறந்த நிலையில் உள்ளது. இந்தப் பட்டியலில் சீனா 35.7 மதிப்பெண்களையும், அமெரிக்கா 41.8 மதிப்பெண்களையும் பெற்றுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## நாமக்கல் அருகே ரயில் முன் பாய்ந்து
# ஆர்.டி.ஓ., மனைவி தற்கொலை

**நாமக்கல், ஜூலை 07-**

திருச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலரும் அவரது மனைவியும் நாமக்கல் அருகே ரயில்முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

நாமக்கல் மோகனூர் சாலை கலைவாணி நகரைச் சேர்ந்தவர் சுப்பிரமணியன் (55). இவர் திருச்சியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வந்தார். இவருக்கு பிரமிளா (51) என்ற மனைவியும், சன்யுக்தா (25) என்ற மகளும், ஆதித்யா (21) என்ற மகனும் உள்ளனர். மனைவி பிரமிளா மோகனூர் அருகே ஆண்டாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார்.





இந்நிலையில் நேற்று அதிகாலை நாமக்கல் அருகே வகுரம்பட்டி என்ற இடத்தில் நாமக்கல்-கரூர் ரயில்வே தண்டவாளத்தில் சுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவி பிரமிளா ஆகியோர் உடல் சிதறி உயிரிழந்து கிடந்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த சேலம் ரயில்வே போலீசார் இரு பிரேதங்களையும் கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

இருவரது பிரேதமும் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வட்டாரப் போக்குவரத்து அலுவலரும் அவரது மனைவியும் ரயில்முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நாமக்கல் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# டெக்சாஸ் வெள்ளம் - 51 பேர் பலி

**டெக்சாஸ், ஜூலை 07-**


அமெரிக்காவில், வெள்ளத்தில் சிக்கி, 15 குழந்தைகள் உட்பட 43 பேர் உயிரிழந்தனர். முகாமில் இருந்து 27 பெண்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.



அமெரிக்காவின், தென்-மத்திய டெக்சாஸ் மாகாணத்தின், மலைப் பகுதியில் அமைந்துள்ள கெர் கவுன்டியில் கடந்த 3 தினங்களுக்கு முன் பலத்த காற்றுடன் திடீரென கனமழை கொட்டியது. இதனால் குவாடலூப் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. குவாடலூப் நதியில் 45 நிமிடங்களில் 26 அடி அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்து, கரையில் இருந்த குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்தது. இதில் 15 குழந்தைகள் உட்பட 43 பேர் உயிரிழந்தனர். மேலும் குவாடலூப் ஆற்றங்கரையோரம் இருந்த கிறிஸ்துவ கோடைக்கால முகாமில் தங்கியிருந்தவர்களில், 27 பெண்கள் மாயமாகி இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

வெள்ளம் ஏற்பட்ட போது முகாமில் 700 பெண்கள் இருந்துள்ளனர். இறந்தவர்களில் 3 குழந்தைகள் உட்பட 8 பேர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. கெர் கவுன்டியின் சராசரி ஆண்டு மழைப்பொழிவில் மூன்றில் ஒரு பங்கு மழை அதாவது, 30 செ.மீ., மழை ஒரே இரவில் பெய்துள்ளதே நிலைமை மோசமாக காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**07-07-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். தொழில், வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படும். பெண்ணால் குடும்பத்தில் கலகம் உருவாகலாம். வழக்குகளில் வெற்றி கேள்விக் குறியாகும்.

**ரிஷபம்:-** வாகன, போஜன சுகங்கள் கூட, அவருக்கு என்ன பெரிய ஆள் எனப் பெயர் பெறுவீர்கள். காதல் வலையில் விழ நேரலாம். மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**மிதுனம்:-** உங்கள் நீண்ட நாள் நண்பரை சந்தித்து மகிழ்வீர்கள். இதுவரை இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து தனவரவு உண்டாகும்.

**கடகம்:-** உங்கள் செயல்களில் வெற்றி பெற மிகுந்த பிரயாசைப் பட நேரும். சுயநம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவை தட்டினாலும். பயணங்களில் தடைகள் ஏற்படலாம்.

**சிம்மம்:-** இன்று, நன்கு பழகியவர்களே மோசம் செய்வார் எனவே, எவரிடமும் எச்சரிக்கையாக இருக்கவும். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நாள்.

**கன்னி:-** இன்று, தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, சுகம் ஆகியவை அதிகரிக்கும். மனத்தெம்பும், மன மகிழ்ச்சியும் ஏற்படும் நாள். மனைவியின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பணவரவு உண்டு.

**துலாம்:-** தன்னம்பிக்கை குறையும் நாள். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பத்தினரிடையே வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கவனமாக படித்தால் தடைகளைத் தகர்த்தெரியலாம்.

**விருச்சிகம்:-** இன்று, வாகன யோகம் உண்டு. இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு, இன்று பேச்சே மூலதனமாகும். அரசால் ஆதாயம் உண்டு.

**தனுசு:-** பெண்களால் பணம் விரயமாகும். கோபத்தைக் குறைப்பது நல்லது. திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். வியாபாரிகளுக்கு இலாபங்கள் ஓரளவு குறையும்.

**மகரம்:-** தனலாபமும், திருமணம் போன்ற சுபகாரியங்கள் மற்றும் எல்லா வகையிலும் நன்மையும் ஏற்படும். பெண்களால் லாபம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு.

**கும்பம்:-** தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும். அதிகாரிகள் தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரிவார். அரசு ஆதரவும், அதிகாரிகளால் அனுகூலம் ஏற்படும்.

**மீனம்:-** அரசிடம் இருந்து எதிர்பார்க்கும் உதவிகள் தாமதமின்றி கிடைக்கும். புனிதப் பயணங்கள் மனமகிழ்ச்சி தரும். மனைவியின் செயல்பாடுகள் குடும்பத்தினரிடையே ஒற்றுமை அதிகரிக்கும்.

## பாகிஸ்தானில் சோகம்:
# அடுக்குமாடி இடிந்து 27 பேர் பலி

**லாகூர், ஜூலை 07-**

பாகிஸ்தான் நாட்டின் லாகூரில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விபத்துக்குள்ளானதில் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி 9 பெண்கள் உள்பட 27 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் நாட்டின் லாகூர் மாகாணம் பாக்தாதி நகரில் 5 அடுக்குமாடிகளை கொண்ட குடியிருப்பு உள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பு 40க்கும் மேற்பட்டோர் வசித்து வந்தனர். இந்நிலையில், இந்த அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விபத்துக்குள்ளானது. இதில் பலரும் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். இந்த சம்பவம் குறித்து அறிந்த மீட்புக்குழுவினர் விரைந்து வந்து இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். சிலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

ஆனாலும், இந்த விபத்தில் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி 9 பெண்கள் உள்பட 27 பேர் உயிரிழந்தனர். மேலும், இந்த விபத்தில் மேலும் சிலர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதாக அவர்களை மீட்கும்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

## பீகார் மாநிலத்தில்
# 3 கோடி வாக்காளர்கள் நீக்கப்படும் அபாயம்: சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு பதிவு

**புதுடில்லி, ஜூலை 07-**

பீகாரில் சுமார் 3 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்குரிமையை இழக்கும் அபாயம் இருப்பதாக சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டள்ளதொரு பொதுநல மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



பீகாரில் வரும் டிசம்பர் இறுதிக்குள் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தச் சூழலில், பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. நாடெங்கிலும் பல்வேறு மாநிலத் தேர்தல்களில் பா.ஜ.க.வுக்கு சாதகமாக வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் நடைபெற்றதாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்தநிலையில், பீகாரில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளும் பா.ஜ.க.வுக்கு சாதகமானதொரு நடவடிக்கையாக எதிர்க்கட்சிகள் கருதுகின்றன. இதனால் இதற்கு எதிர்ப்பும் வலுத்துள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் கோரப்பட்டுள்ள ஆவணங்களால் பீகாரில் சுமார் 3 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் அதிலும் குறிப்பாக, சிறுபான்மையினர், எஸ்சி எஸ்டி பிரிவினர், இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களைச் சார்ந்தோர் பலர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவர் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதனைச் சுட்டிக்காட்டி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு (எஸ்.ஐ.ஆர்) எதிராக உச்சநீதிமன்றத்தில் ஜனநாயக சீர்திருத்தத்துக்கான சங்கம் (ஏடிஆர்) சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கை அவசரகதியில் முடிவெடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்கா: துப்பாக்கி சூட்டில் 2 பேர் பலி

**இண்டியானா, ஜூலை 07-**

அமெரிக்காவின் இண்டியானா போலீஸ் பகுதியில் துப்பாக்கி சூடு சம்பவம் நடந்தது. அங்கு அதிகாலையில் சில சிறுவர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் நடந்த துப்பாக்கி சூட்டில் 2 சிறுவர்கள் பலியானார்கள். 5 பேர் காயம் அடைந்தனர். இந்த தகவல் அறிந்ததும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். இச்சம்பவம் தொடர்பாக 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

## படிப்பை பதிவு செய்வதில் சிக்கல்:
# சென்னையில் டாக்டர்கள் போராட்டம்

**சென்னை, ஜூலை 07-**

வெளிநாடுகளில் மருத்துவம் படித்தோருக்கு, தற்காலிக தகுதி சான்றிதழ் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதை கண்டித்து, சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் வெளிநாட்டு பிரிவு சார்பில், இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மருத்துவ மாணவர்கள் சங்க வெளிநாட்டு பிரிவு நிர்வாகி வசந்த் பிலிப்ஸ் அபிஷேக் கூறியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக, 1,400 மாணவர்கள், வெளிநாடுகளில் மருத்துவ படிப்பை முடித்து தமிழகம் திரும்புகின்றனர். அவர்கள் இந்தியாவில் தேர்வு எழுதி தகுதி பெற்றதும், தமிழ்நாடு மருத்துவ கவுன்சிலிங் சார்பில், தற்காலிக தகுதி சான்றிதழ் வழங்கப்படும். இதன் பிறகே, எம்.ஜி.ஆர்., மருத்துவ பல்கலையில் தடையில்லா சான்று பெற்று, மருத்துவமனைகளில் ஓராண்டு பயிற்சி டாக்டராக பணியாற்ற முடியும். மேலும், நிரந்தர டாக்டராகவும் பதிவு செய்ய முடியும்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக, தற்காலிக தகுதி சான்று பெற பதிவு செய்து காத்திருக்கிறோம். ஆனால், பணம் கொடுத்தால் தான் சான்று கிடைக்கும் என்ற சூழல் உள்ளது. இதை கண்டித்து தான் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். இவ்வாறு கூறினார்.

# சென்னை-தூத்துக்குடி விமானத்தில் திடீர் தொழில்நுட்ப கோளாறு

**சென்னை, ஜூலை 07-**

தொழில்நுட்ப கோளாறு காரணமாக சென்னையில் இருந்து தூத்துக்குடி புறப்பட வேண்டிய ஸ்பைஸ்ஜெட் விமானத்தின் புறப்பாடு தாமதமாகியுள்ளது.

சென்னையில் இருந்து 70 பேருடன் ஸ்பைஸ்ஜெட் விமானம் ஞாயிற்றுக்கிழமை காலை தூத்துக்குடி புறப்பட்டது. விமானம் புறப்படும் போதே தொழில்நுட்ப கோளாறு ஓடுபாதையிலேயே கண்டறியப்பட்டது. இதையடுத்து அந்த விமானம் உடனே நிறுத்தப்பட்டது. விமானத்தில் ஏற்பட்டுள்ள கோளாறை சரி செய்யும் பணியில் தொழில்நுட்ப நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

விமானியின் சாமர்த்தியத்தால் தொழில்நுட்ப கோளாறு முன்கூட்டியே கண்டறியப்பட்டதால் விமானத்தில் பயணிக்க இருந்த 70 பேரும் நல்வாய்ப்பாக உயிர் தப்பினர். நிலைமை சீரானதும் விமானம் தாமதமாக புறப்படும் என ஸ்பைஸ் ஜெட் நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்த தாமதத்தால் விமான பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

### அரசு பங்களாவை காலி செய்யாதது ஏன்?
# முன்னாள் நீதிபதி சந்திரசூட் விளக்கம்

புதுடெல்லி, ஜூலை 07-

தான் அரசு பங்களாவை காலி செய்யாததற்கான காரணத்தை சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி சந்திரசூட் விளக்கியுள்ளார்.



புதுடெல்லியில் உள்ள இந்திய தலைமை நீதிபதியின் அதிகாரப்பூர்வ இல்லத்தை, முன்னாள் தலைமை நீதிபதி டிஒய் சந்திரசூட் காலி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சுப்ரீம் கோர்ட் நிர்வாகம் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது. ஜூலை 1 ஆம் தேதி மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்திற்கு சுப்ரீம் கோர்ட் நிர்வாகம் அனுப்பிய கடிதத்தில், இந்திய தலைமை நீதிபதியின் அதிகாரப்பூர்வ பங்களாவை காலி செய்து சுப்ரீம் கோர்ட்டின் வீட்டுவசதி தொகுப்புக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்று தெரிவித்துள்ளது. இந்த பங்களாவில் முன்னாள் தலைமை நீதிபதி டிஒய் சந்திரசூட் அனுமதிக்கப்பட்ட காலத்தையும் தாண்டி தங்கியுள்ளார் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து விளக்கமளித்துள்ள சந்திரசூட், 'எனது இரு மகள்களுக்கும் நெமலின் மயோபதி எனும் மரபணு பிரச்சினை மற்றும் இணை நோய்கள் உள்ளன. அவர்களுக்கு எய்ம்ஸில் உள்ள மருத்துவ நிபுணர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். அவர்கள் தங்கும் வகையில் சிறப்பு வசதிகள் கொண்ட வீடு எனக்குத் தேவை. இதற்காக நான் பிப்ரவரி மாதம் அலைந்து திரிந்து விட்டேன். சர்வீஸ் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் ஹோட்டல்களையும் முயற்சித்தேன், ஆனால் அவை எதுவும் எனக்கு ஒத்துவரவில்லை.

அரசாங்கம் எனக்கு தற்காலிகமாக ஒரு வீட்டை வாடகைக்கு ஒதுக்கியுள்ளது. ஆனால் அந்த பங்களா இரண்டு ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருந்ததால், அங்கே தற்போது பழுது பார்ப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. அவை முடிந்தவுடன் நான் வீட்டை மாற்றிவிடுவேன்" என்று தெரிவித்துள்ளார்.

# குற்றச்சம்பவங்களை தடுப்பதில் பீகார் அரசு தோல்வி: ராகுல் காந்தி

பாட்னா, ஜூலை 07-

குற்றச் சம்பவங்களை தடுப்பதில் பீகார் அரசு தோல்வி அடைந்து விட்டதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

பீகாரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தொழிலதிபர் கோபால் கெம்கா சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலை சம்பவத்தை கண்டித்து ஆளும் ஐக்கிய ஜனதா தளம் மற்றும் பா.ஜ.க. கூட்டணி அரசை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

"பீகாரை ஆட்சி செய்யும் பா.ஜ.க.-நிதிஷ்குமார் கூட்டணி, நாட்டின் குற்ற தலைநகராக பீகாரை மாற்றியுள்ளது. தொழிலதிபர் கோபால் கெம்கா வெளிப்படையாக சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமே இதற்கு உதாரணம். கொலை, கொள்ளை, துப்பாக்கி சூடு போன்ற குற்றச் சம்பவங்கள் பீகாரில் இயல்பாகிவிட்டது. இவற்றைத் தடுப்பதில் ஆளும் அரசு முற்றிலும் தோல்வி அடைந்துவிட்டது.

அச்சமற்ற, முன்னேற்றத்தை நோக்கிச் செல்லக்கூடிய புதிய பீகாருக்கான நேரம் இது. இந்த முறை தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஆட்சி மாற்றத்துக்கு மட்டுமல்ல; பீகாரை காப்பதற்கும்கூட" என ராகுல் காந்தி தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார்.

# 90-வது பிறந்த நாள்: புத்த மத துறவி தலாய் லாமாவுக்கு பிரதமர் வாழ்த்து

புதுடெல்லி, ஜூலை 07-

தலாய் லாமாவின் நீடித்த உடல் ஆரோக்கியம் மற்றும் நீண்டகால வாழ்க்கைக்காக நாங்கள் வேண்டி கொள்கிறோம் என்று பிரதமர் மோடி பதிவிட்டு உள்ளார்.

திபெத்திய புத்த மத துறவியான தலாய் லாமாவின் 90-வது பிறந்த நாள் நேற்று கொண்டாடினார். இதனை முன்னிட்டு உலகம் முழுவதும் உள்ள மத தலைவர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்டோர் அவருக்கு இன்று பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

தலாய் லாமாவுக்கு பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட வாழ்த்து செய்தியில், தலாய் லாமாவின் 90-வது பிறந்த நாளுக்கு வாழ்த்து தெரிவிக்கும் 140 கோடி இந்தியர்களுடன் நானும் இணைந்து கொள்கிறேன். அன்பு, இரக்கம், பொறுமை மற்றும் நல்லொழுக்கம் ஆகியவற்றின் நீடித்த அடையாளம் அவர் என பதிவிட்டு உள்ளார். அவருடைய செய்தி, மதிப்பை தூண்டியுள்ளது. அனைத்து மதத்தினர் இடையேயும் பாராட்டையும் பெற்றுள்ளது. அவருடைய நீடித்த உடல் ஆரோக்கியம் நீண்டகால வாழ்க்கைக்காக நாங்கள் வேண்டி கொள்கிறோம் என பிரதமர் மோடி பதிவிட்டு உள்ளார்.

# வரும் 8-ம் தேதி த.வெ.க. பயிற்சி பட்டறை ஆலோசனைக்கூட்டம்

சென்னை, ஜூலை 07-

த.வெ.க.வின் உறுப்பினர் சேர்க்கைப் பணிக்கான பயிற்சிப் பட்டறை ஆலோசனைக் கூட்டம், ஜூலை 8ம் தேதி பனையூரில் நடக்க உள்ளதாக அக்கட்சி பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:- தமிழகத்தின் இரண்டு கோடி இல்லங்களில், இரண்டு கோடி கழக உறுப்பினர்கள் என்ற இலக்குடன் உறுப்பினர் சேர்க்கைப் பணிகள் தீவிரப்படுத்தப்பட உள்ளன. இது குறித்துச் சென்னை, பனையூரில் உள்ள கழகத்தின் தலைமை நிலையச் செயலக அலுவலகத்தில், வருகிற 08.07.2025 அன்று காலை 10.35 மணியளவில், பயிற்சிப் பட்டறை ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் இரண்டு நிர்வாகிகளை மட்டும் மடிக்கணினியுடன் அழைத்து வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்யா, சீனா நிதி அமைச்சர்களுடன் நிர்மலா சீதாராமன் பேச்சுவார்த்தை

ரியோடிஜெனிரோ, ஜூலை 07-

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு ரஷ்ய அதிபர் புதின் இந்தியாவிற்கு அளித்த ஆதரவிற்கு நன்றி தெரிவிப்பதாக நிர்மலா சீதாராமன் கூறினார்.



பிரேசில் நாட்டின் தலைநகர் ரியோ டி ஜெனிரோவில் 'பிரிக்ஸ்' (BRICS) நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி கவர்னர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார். இந்த பயணத்தின் ஒரு பகுதியாக ரஷ்யா மற்றும் சீனாவின் நிதி அமைச்சர்களுடன் நிர்மலா சீதாராமன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அப்போது இந்தியா-சீனா மற்றும் இந்தியா-ரஷ்யா இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் நலன்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

ரஷ்ய நிதி அமைச்சர் அன்டன் சிலுவானோவ் உடனான சந்திப்பின்போது, பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு ரஷ்ய அதிபர் புதின் இந்தியாவிற்கு அளித்த ஆதரவிற்கு நன்றி தெரிவிப்பதாக நிர்மலா சீதாராமன் கூறினார். பின்னர் அவர்கள் இந்தியா-ரஷ்யா இடையிலான நீண்டகால கூட்டாண்மை குறித்து விவாதித்தனர்.

இதே போல் சீன நிதி அமைச்சர் லான் போனுடன் நடைபெற்ற சந்திப்பின் போது, இந்தியா-சீனா இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து நிர்மலா சீதாராமன் விவாதித்தார். உலகின் மிகப்பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களாக இரு நாடுகளும் இருப்பதால், உள்ளார்ந்த உலகளாவிய வளர்ச்சி மற்றும் புதுமைகளை அடையக் கூடிய நாடுகளாக இந்தியாவும், சீனாவும் உள்ளன என்று அவர் கூறினார். இதைத் தொடர்ந்து இந்தோனேசியாவின் துணை நிதி அமைச்சர் தாமஸ் ஜிவாண்டோனோ மற்றும் பிரேசில் நிதி அமைச்சர் பெர்னாண்டோ ஹடாட் ஆகியோரையும் நிர்மலா சீதாராமன் சந்தித்து பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் எக்ஸ் கணக்கு முடக்கம்: மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி, ஜூலை 07-

ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் எக்ஸ் கணக்கு இந்தியாவில் முடக்கப்பட்டது குறித்து மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

சர்வதேச செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸ் நிறுவனத்தின் எக்ஸ் தள கணக்கு இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளது. அரசின் சட்டப்பூர்வ கோரிக்கையை ஏற்று இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த பக்கத்தில் எக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மத்திய அரசின் செய்தித் தொடர்பாளர் இது குறித்து கூறியுள்ளதாவது: "ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் எக்ஸ் கணக்கை இந்தியாவில் முடக்குமாறு அரசு தரப்பில் இப்போது எந்தவித கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை. இந்த சிக்கலுக்கு தீர்வு காண எக்ஸ் தளத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறோம்" என அவர் கூறியுள்ளார்.

கடந்த மே மாதம் 'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கையின் போது சில எக்ஸ் தள கணக்குகளை முடக்குமாறு அந்நிறுவனத்துக்கு மத்திய அரசு சட்ட ரீதியாக கோரி உள்ளது. அதன்படி அப்போது சில எக்ஸ் தள கணக்குகள் முடக்கப்பட்டு இருக்கலாம். அதில் ராய்ட்டர்ஸ் நிறுவனமும் ஒன்றாக இருந்திருக்கலாம் என தெரிகிறது. இந்நிலையில், தற்போது அந்த கோரிக்கைக்கு எக்ஸ் தளம் நடவடிக்கை எடுத்து இதற்கு காரணமாக இருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

# குண்டு பாய்ந்து ராணுவ வீரர் பலி

ஜம்மு, ஜூலை 07-

ஜம்மு-காஷ்மீரில் துப்பாக்கியில் இருந்து குண்டு பாய்ந்து ராணுவ வீரர் பலியான நிகழ்வு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.


ஜம்மு-காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் உள்ள ராணுவ முகாமில் தனது சொந்த சர்வீஸ் துப்பாக்கியில் இருந்து குண்டு பாய்ந்து ராணுவ வீரர் ஒருவர் பலியானதாக அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர். 54 ராஷ்டிரிய ரைபிள்ஸில் பணியமர்த்தப்பட்ட வீரர், சனிக்கிழமை இரவு ரஜோரி நகரத்திலிருந்து 40 கி.மீ தொலைவில் சோல்கி கிராமத்தில் உள்ள முகாமின் தலைமையகத்தில் பணியில் இருந்தபோது பலியானார்.

துப்பாக்கிச் சூடு சப்தம் கேட்டதும் சக வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். ஆனால் அங்கு வீரர் ஒருவர் பலியாகியிருப்பதைக் கண்டனர். ராணுவ வீரர் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது தற்செயலாக அவரது துப்பாக்கியிலிருந்து குண்டு வெளியேறியதா என்பது உடனடியாகத் தெளிவாகத் தெரியவில்லை என்று அதிகாரிகள் மேலும் கூறினர்.

### சாத்தூர் அருகே பயங்கரம்: தனியார்
# பட்டாசு ஆலை வெடிவிபத்தில் ஒருவர் பலி; 5 பேர் படுகாயம்

சாத்தூர், ஜூலை 07-

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் நேற்று காலை ஏற்பட்ட வெடிவிபத்தில் தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். 5 பேர் காயமடைந்தனர்.



சிவகாசி அருகே திருத்தங்கலைச் சேர்ந்த கணேசன் என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை ஒன்று சாத்தூர் அருகில் உள்ள கீழத்தாயில்பட்டியில் செயல்பட்டு வருகிறது. நாக்பூர் உரிமம் பெற்று இயங்கி வரும் இந்த பட்டாசு ஆலையில் பேன்சி ரக பட்டாசுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆலையில் 50-க்கும் மேற்பட்ட அறைகளில் 100-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு தயாரிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று ஏற்பட்ட வெடி விபத்தில் 15-க்கும் மேற்பட்ட அறைகள் வெடித்துச் சிதறி தரைமட்டமாகின. வெடி மருந்து தயாரிக்கும் போது உராய்வு ஏற்பட்டு வெடி விபத்து ஏற்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த விபத்தில் பனையடிப்பட்டியைச் சேர்ந்த பாலகுருசாமி என்பவர் உயிரிழந்தார். 5 பேர் காயமடைந்தனர். உயிரிழந்த பாலகுருசாமியின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், காயமடைந்த 5 பேர் சிகிச்சைக்காக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சாத்தூர் மற்றும் வெம்பக்கோட்டை தீயணைப்பு படை வீரர்கள் தீ அணைப்பு, மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். விபத்து குறித்து வெம்பக்கோட்டை போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மேல்விஷாரத்தில் வரும் 10-ம் தேதி ஆர்ப்பாட்டம்: அ.தி.மு.க. அறிவிப்பு

சென்னை, ஜூலை 07-

மேல்விஷாரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தரமான மருத்துவ சிகிச்சையை அளிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தி வரும் ஜூலை 10 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அ.தி.மு.க. அறிவித்துள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் அண்ணா சாலை மெயின் ரோட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த ஆட்சியில், 24 மணி நேரமும் இயங்கக்கூடிய 30 படுக்கை வசதிகளைக் கொண்ட முழு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு, புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கழக அரசின் சாதனையை மறைத்து ஸ்டிக்கர் ஒட்டி, 23.2.2025 அன்று மேற்கண்ட மருத்துவமனையை முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அன்று முதல் இம்மருத்துவ மனை முறையான பராமரிப்பு இன்றி இயங்கி வந்த நிலையில், திமுக அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் ஆய்வுக்குச் சென்றபோது, மருத்துவர்கள், செவிலியர்கள் யாரும் பணியில் இல்லாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சையை அளிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தியும், அ.தி.மு.க. ராணிப்பேட்டை மேற்கு மாவட்டத்தின் சார்பில், 10.7.2025 – வியாழக்கிழமை காலை 10 மணியளவில், மேல்விஷாரம் கத்துவாடி கூட்டு ரோட்டில் முன்னாள் அமைச்சருமான சேவூர் இராமச்சந்திரன் தலைமையிலும்; ராணிப்பேட்டை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.சுகுமார் முன்னிலையிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒடிசா, புரி ஜெகநாதரை தரிசிக்க குவிந்த லட்சக்கணக்கான பக்தர்கள்

புவனேஸ்வர், ஜூலை 07-

தங்க அங்கி அலங்காரத்தில் ஜொலிக்கும் தெய்வங்களை தரிசனம் செய்வதற்காக பல லட்சம் பக்தர்கள் புரி நகரில் குவிந்தனர்.

ஒடிசா மாநிலம் புரி நகரில் ஜெகநாதர் ரத யாத்திரை உலக பிரசித்தி பெற்றது. ரத யாத்திரையைக் காண நாடு முழுவதும் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள். 9 நாட்கள் இந்த திருவிழா நடைபெறும். தேர்கள் சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள குந்திச்சா கோவிலை சென்றடைந்ததும் அங்கு ஒரு வார காலம் ஜெகநாதர் ஓய்வெடுப்பார். பின்னர் மீண்டும் தேர்கள் புறப்பட்டு ஜெகநாதர் கோவிலை வந்தடைந்ததும் ரத யாத்திரை நிறைவுபெறும். மறுநாள் தங்க அங்கி அலங்காரத்தில் ஜெகநாதர், பாலபத்திரர் மற்றும் சுபத்ரா தேவி ஆகியோர் தேர்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்கள். இந்த தங்க அங்கிகளின் எடை 208 கிலோ ஆகும். இந்த தரிசனத்தைக் காண லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள்.

அவ்வகையில் இந்த ஆண்டுக்கான ரத யாத்திரை கடந்த மாதம் 27-ம் தேதி தொடங்கியது. தங்கள் இருப்பிடத்தில் இருந்து புறப்பட்ட ஜெகநாதர், பாலபத்திரர், சுபத்ரா ஆகியோர் சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீகுந்திச்சா கோவிலை (குண்டிச்சா கோவில்) அடைந்து ஒரு வார காலம் ஓய்வெடுத்தனர். பின்னர் அங்கிருந்து திரும்பி வரும் பகுதா யாத்திரை நேற்று மாலை நடைபெற்றது. தங்க அங்கி அலங்காரத்தில் ஜொலிக்கும் தெய்வங்களை தரிசனம் செய்வதற்காக பல லட்சம் பக்தர்கள் புரி நகரில் குவிந்தனர். இதையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# பா.ம.க. இரண்டாக பிரிய வாய்ப்பே இல்லை
## தொல். திருமாவளவன் கணிப்பு

திருச்சி, ஜூலை 07-

பா.ம.க. இரண்டாக பிரிய வாய்ப்பே இல்லை என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களுக்கு நேற்று அளித்த பேட்டியில், பா.ம.க. இரண்டாக பிரிய வாய்ப்பில்லை. அப்பாவும், மகனும் ஒரு கட்சியாக ஒன்று சேர்ந்து தேர்தலை ஒன்றாக சந்திப்பார்கள் என நம்புகிறேன். எடப்பாடி பழனிசாமிக்கு தாமதமாக இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கி உள்ளது. இருந்த போதும் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது.

அ.தி.மு.க. கூட்டணியில் முதல்வர் யார் என்பதை தேர்தலுக்குப் பின் தான் முடிவெடுக்கப்படும் என டி.டி.வி தினகரன் கூறியுள்ளார். அதற்கு அந்த கூட்டணியில் பெரிய கட்சியான அ.தி.மு.க. பொதுச்செயலர் எடப்பாடி தான் கருத்துக் கூற வேண்டும். தி.மு.க., பா.ஜ.க.வை கொள்கை எதிரி என கூறும் விஜய், அ.தி.மு.க.வை பற்றி வெளிப்படையாக எதுவும் கூறாதது ஏன் என்கிற கேள்வி எழுகிறது. அ.தி.மு.க.வை தோழமைக் கட்சியாக பார்க்கிறாரா என கேள்வி எழுகிறது. அதற்கு விஜய் பதில் கூற வேண்டும்.

பா.ஜ.க. தான் சிவசேனையை உடைத்தது. மாநில உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் கட்சிகளை அவர்கள் உடைப்பார்கள். தேர்தல் ஆதாயத்திற்காக மட்டுமல்லாமல் மாநில உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் கட்சிகளை அவர்கள் பிரிப்பார்கள். இந்த நிலையில் ராஜ் தாக்கரே, உத்தவ் தாக்கரே மாநில உரிமைகளுக்காக காலம் தாழ்ந்தாவது இணைந்துள்ளார்கள் என்றால் அதை வரவேற்கிறேன். கச்சத்தீவு குறித்து ஒன்றிய ஆட்சியாளர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கச்சத்தீவு தொடர்பாக இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியது தமிழர்களுக்கு எதிரானது என்பதை விட தேசத்திற்கு எதிரான கருத்து. இதற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பதிலளிக்க வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் கலாசார உரிமையை மீட்டுத்தர இந்திய ஒன்றிய அரசு முன்வர வேண்டும். அஜித்குமார் கொலை விவகாரத்தில் முதல்வர் உடனடியாக தலையிட்டு துணிச்சலான முடிவை எடுத்துள்ளார். அவரின் தாயாரிடம் வருத்தம் தெரிவித்துள்ளார். வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றியுள்ளார். இது சற்று ஆறுதல் தருகிறது. இருந்த போதும் இந்த விவகாரத்தில் எதிர்கட்சிகள் வழக்கம் போல் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என அரசியல் அணுகுமுறைகளையே கையாள்கிறார்கள் என்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மணிப்பூரில் 2 தீவிரவாதிகள் கைது

இம்பால், ஜூலை 07-

மணிப்பூரில் தேடுதல் நடவடிக்கையின்போது இரண்டு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து போலீஸார் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருப்பதாவது, மாநிலத்தில் மிரட்டி பணம் பறித்தல் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ய உளவுத்துறை அடிப்படையிலான தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தடைசெய்யப்பட்ட பிரேபக் அமைப்பைச் சேர்ந்த பெண் சனிக்கிழமை தௌபாலில் உள்ள சலுங்பாம் பகுதியில் கைது செய்யப்பட்டார். அதே நேரத்தில் அந்த அமைப்பைச் சேர்ந்த மற்றொரு உறுப்பினர் இம்பால் மேற்கு மாவட்டத்தில் உள்ள நாகமாபால் பகுதியில் கைது செய்யப்பட்டார்.

சண்டேல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளை வெள்ளிக்கிழமை பாதுகாப்புப் படையினர் மீட்டனர். பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் 12 துப்பாக்கிகள், நான்கு ஐஇடிக்கள் மற்றும் நான்கு கையெறி குண்டுகள் அடங்கும். இவ்வாறு அவர்கள் கூறினர். மணிப்பூரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இன வன்முறை வெடித்ததில் இருந்து பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வரும் ஆகஸ்டு 15-ம் தேதி
# நெல்லையில் பா.ஜ.க.வின் முதல் மாநாடு

நெல்லை, ஜூலை 07-

தமிழக சட்டசபை தேர்தலையொட்டி நெல்லையில் பா.ஜ.க.வின் முதல் மாநாடு ஆகஸ்டு 15-ந்தேதி நடைபெறும் என அக்கட்சி அறிவித்து உள்ளது.;

தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 2026-ம் ஆண்டு நடைபெற உள்ளது. ஆளும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி ஒருபுறம் தேர்தலுக்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறது. தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், ம.தி.மு.க. விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டு உள்ளிட்ட கட்சிகள் உள்ளன. இந்த கூட்டணி கடந்த 2017-ம் ஆண்டு முதல் நீடித்து வருகிறது.


அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து பா.ஜ.க. தேர்தலை சந்திக்க தயாராகி வருகிறது. நாம் தமிழர் கட்சியும் களத்தில் உள்ளது. நடிகர் விஜய் தலைமையிலான த.வெ.க.வும் தேர்தலில் போட்டியிடுகிறது. இதனால், 4 முனை போட்டி நிலவுவது உறுதியாகி இருக்கிறது.

இந்நிலையில், சென்னை காட்டாங்குளத்தூரில் பா.ஜ.க.வின் பூத் கமிட்டி தொடர்பான கூட்டம் நேற்று நடந்தது. இதில், அக்கட்சியின் முன்னாள் தலைவர்கள், முக்கிய நிர்வாகிகள், பிரமுகர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

அப்போது, அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டசபை தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய கட்சி பணிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது. இதில், பா.ஜ.க.வின் முதல் மாநாடு நடைபெறும் இடம் பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன்படி, தமிழக சட்டசபை தேர்தலையொட்டி ஆகஸ்டு 15-ந்தேதி நெல்லையில் பா.ஜ.க.வின் முதல் மாநாடு நடைபெறும் என அக்கட்சி அறிவித்துள்ளது.


இந்த கூட்டத்தில், கூட்டணியில் நாம் இடம் பெற்றிருப்பது அ.தி.மு.க.வுக்கு பலம் சேர்க்கும் என காட்ட வேண்டும் என நிர்வாகிகளுக்கு அக்கட்சியின் தலைமை அறிவுறுத்தி உள்ளது. மேலும் இந்த தேர்தலில், நடிகர் விஜய்யின் அரசியல் வருகை, நாம் தமிழர் கட்சியின் வாக்கு வங்கி ஆகியவை நமக்கான சவாலாக உள்ளன. இதேபோன்று தி.மு.க. ஆட்சிக்கு எதிரான மனநிலை, ஆபரேஷன் சிந்தூர், அ.தி.மு.க. கூட்டணி ஆகியவை சாதகங்களாக உள்ள விசயங்களாக பார்க்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



கோவை மண்டலத்தில் இருந்து தனது மக்கள் சந்திப்பு இயக்கத்தை இன்று முதல் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தொடங்க உள்ளார். எடப்பாடி பழனிசாமியின் மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணம் ஆட்சி மாற்றத்திற்கான அடித்தளமாக அமையும். அவரது சுற்றுப்பயணத்தில் த.மா.கா. நிர்வாகிகள் வரவேற்பு அளிப்பார்கள்.

- ஜி.கே.வாசன்



பட்டாசு ஆலைகளில் வெடி விபத்து என்பது விருதுநகர் மாவட்டத்திற்கே ஒரு சாபக் கேடாக உள்ளது. தமிழக அரசு பட்டாசு தொழிற்சாலைக்கு என்று தனிக் கவனம் செலுத்தி தமிழகம் முழுவதும் விபத்துகள் நடக்காத வண்ணம் பாதுகாக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு தி.மு.க. அரசு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- பிரேமலதா



அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கையை குறைக்கும் நடவடிக்கையை கைவிட்டு, முதல்வர் இதில் தனிக் கவனம் செலுத்தி, அங்கன்வாடி மையங்களில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பவும், மூடப்பட்ட 500-க்கும் மேற்பட்ட அங்கன்வாடி மையங்களை மீண்டும் திறக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ஓ.பன்னீர்செல்வம்



எங்களது போராட்டம் இந்தி மொழியை எதிர்ப்பது அல்ல. ஆனால், பள்ளிகளில் இந்தியை திணிக்க கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். தொடக்கப்பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயம் கற்க வேண்டும் என்பதை நாங்கள் எதிர்க்கிறோம். அதுதான் எங்களது போராட்டம். இங்கு யாரையும் இந்தி பேசக்கூடாது என நாங்கள் சொல்லவில்லை.

- சஞ்சய் ராவத்



முன்னாள் முதலமைச்சரும் அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி கே.பழனிசாமி திருவொற்றியூருக்கு வருகை தந்து தியாகராஜரையும் வடிவுடையம்மனையும்வணங்கி வழிபட்டார். அவருடன் மாவட்ட செயலாளர் மாதவரம் வி.மூர்த்தி, முன்னாள் எம்எல்ஏவும் பகுதிசெயலாளருமான கே.குப்பன் மற்றும் மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், பூந்தண்டலம் கிராமத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யும் முறையை மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஆர்த்தி மற்றும் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் உடனிருந்தனர்.



திருவொற்றியூர் தாங்கல் பகுதியை சேர்ந்த அல்தாப் மகன் நௌபல் தனியார் பள்ளியில் +2 படிக்கும் இவர், டியூஷன் முடித்துவிட்டு பீர் பயில்வான் தெரு வழியில் வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்த நிலையில் எதிர்பாராத விதமாக, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இறந்து போன பள்ளி மாணவன் குடும்பத்திற்கு மின்சார வாரியம் சார்பில், ரூபாய் 10 லட்சத்திற்கான காசோலையை மாணவர் நௌபல் தந்தை மற்றும் தாயார் அல்தாப் பரக்கத் ஆகியோரிடம், சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மண்டல குழுதலைவர், தி.மு. தனியரசு ஆகியோர் வழங்கிய போது எடுத்தபடம்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி,

# இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 எனும் உயிர்காக்கும் திட்டத்தின் நான்கு லட்சமாவது பயனாளி: அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்

**சென்னை,ஜூலை 07**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏ.சி.எஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், "இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48" திட்டத்தில், 4 இலட்சமாவது பயனாளியை நேரில் சந்தித்து, நலம் விசாரித்து, அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்கள். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டம்

தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் 2021 டிசம்பர் திங்கள் 18ஆம் தேதி மக்கள் நல்வாழ்வுத்துறையில் ஒரு புதிய திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். உலக அளவில் ஒரு புகழ் பெற்ற திட்டமாக இது பயன்பெற்று வருகிறது. சாலை விபத்துகளில் சிக்குபவர்களை உடனடியாக மீட்டு தமிழ்நாட்டில் உள்ள 250 அரசு மருத்துவமனைகள், 473 தனியார் மருத்துவமனைகள் என்று 723 மருத்துவமனைகளில் உடனடியாக சேர்த்து, சேர்க்கப்பட்ட முதல் 48 மணி நேரத்தில் ரூ.1 லட்சம் அரசின் சார்பில் தந்து அவர்களுடைய உயிரை காப்பாற்றுவது என்கின்ற வகையிலான ஒரு மிகச் சிறந்த திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 ஆகும். முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த திட்டம் என்பது தமிழ்நாட்டில் ஏறத்தாழ 500க்கும் மேற்பட்ட அடிக்கடி விபத்துகள் நேர்கின்ற மருத்துவமனைகளாக தேர்ந்தெடுத்து இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த திட்டத்தின்படி, விபத்து நேர்ந்தவுடன், 8 நிமிடங்களுக்குள் ஆம்புலன்ஸ் இந்த இடத்திற்கு சென்றடைந்து, அவசர மருத்துவ தொழில்நுட்பவியர்களின் உதவியுடன் காயமுற்றவர்களின் உயிர்களை காப்பதற்குரிய முதலுதவிகளை செய்து மருத்துவ உதவிகளை ஆம்புலன்ஸ் வழங்கி உடனடியாக மருத்துவமனைகளில் சேர்க்கின்ற இந்த மகத்தான திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் மக்களுக்கு மிகப் பெரிய அளவில் பயன்பெற்று வருகிறது. இந்த திட்டத்தின் இன்னொரு சிறப்பு, தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் மட்டுமின்றி அண்டை மாநிலங்களை சேர்ந்தவர்களாக இருந்தாலும், வெளிநாடுகளை சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஏதாவது ஒரு சாலையில் விபத்துகள் நேர்ந்தால், விபத்து நேர்ந்தவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து வந்து, முதல் 48 மணி நேரத்தில் அவர்களுக்குரிய முதலுதவிகளை செய்து அரசின் சார்பில் ரூ.1 லட்சம் உதவியுடன் அவர்களது உயிரை காப்பது. அந்தவகையில் இந்த திட்டம் ரூ.1 லட்சம் நிதியுதவியோடு, இந்த திட்டம் 3 ஆண்டு காலம் சிறப்பாக வழங்கப்பட்டு வந்தது, 24.12.2024 முதல் தமிழ்நாடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.1 லட்சம் என்பதை ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்கள். அந்த வகையில் தற்போது ரூ.2 இலட்சமாக வழங்கப்பட்டு வருகிறது.



4 இலட்சமாவது பயனாளி

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு இதுவரை 3,99,999 என்கின்ற வகையில் ஏறத்தாழ 4 இலட்சமாவது பயனாளி ஏசிஎஸ் மருத்துவக்கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர் பாரிவாக்கத்தை சேர்ந்த 33 வயது மணிகண்டன் என்கின்ற இளைஞர். தனியார் இருசக்கர வாகன விபத்தில் சிக்கி கால்கள் முறிந்த நிலையில் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தேன். அவருக்கான மருத்துவ செலவை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது என்கின்ற செய்தியினை சொல்லியிருக்கிறோம். மேலும் 4,00,001, 4,00,002, 4,00,003 என்கின்ற பயனாளிகள் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மதுரவாயல் பகுதியைச் சார்ந்த 50 வயது மதியழகன், புரசைவாக்கம் பகுதியைச் சார்ந்த 28 வயது சரண்யா, கோலப்பஞ்சேரி பகுதியைச் சார்ந்த 33 வயது விஸ்வநாதன் ஆகியோரும் வெவ்வேறு சாலை விபத்துகளில் குறிப்பாக இருசக்கர வாகன விபத்து, ஆட்டோ விபத்து என்று சிகிச்சை பெற்று வருகிறார்கள். 4 பேரையும் தனித்தனியாக சந்தித்து அவர்களிடம் நலம் விசாரிக்கப்பட்டது. இந்த திட்டத்தின்படி 101 சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட பிறகு 05.07.2025 வரை 3,99,952 பயனடைந்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசு ஒட்டுமொத்தமாக செலவிட்டிருக்கும் தொகை ரூ.365.02 கோடி ஆகும். அரசு மருத்துவமனைகளைப் பொறுத்தவரை 3,69,785 பயனாளிகள் ரூ.313.06 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. தனியார் மருத்துவமனைகளைப் பொறுத்தவரை 30,167 பயனாளிகள் ரூ.51.95 கோடி செலவில் பயனடைந்திருக்கிறார்கள். அந்தவகையில் இந்த திட்டம் மிகச்சிறப்பாக சென்றுக் கொண்டிருக்கிறது.

காப்பீட்டுத் தொகை ரூ.1 இலட்சமாக இருந்தபோது, 3,26,246 பயனாளிகள் ரூ.285.13 கோடி செலவில் பயனடைந்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அதனை ரூ.2 இலட்சமாக உயர்த்திய பிறகு, 73,706 பயனாளிகள் ரூ.79.89 கோடி செலவில் பயனடைந்திருக்கிறார்கள். அந்தவகையில் இந்த திட்டத்தில் 4 இலட்சமாவது பயனாளியை இன்று ஏசிஎஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேரில் சந்தித்து நலம் விசாரிக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் சிறப்புகளை அறிந்த ஒன்றிய அரசு இதே போன்று ஒரு திட்டமான விபத்து நேர்ந்த 7 நாட்களுக்குள் ரூ.1.5 லட்சம் உதவித் தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இந்த திட்டத்தின் சிறப்பு இன்று இந்தியா முழுமைக்கும் ரூ.1.5 லட்சம் பெற்று பயன்பெறுவதற்கு உறுதுணையாக இருந்த திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இன்னுயிர் காப்போம் நம்மைகாக்கும் 48 எனும் திட்டம் ஆகும். தமிழ்நாட்டில் விபத்து நேர்ந்திருக்கிறது என்பதை உறுதி செய்த பிறகு அவர்களுக்கு உதவி செய்கிறோம். ஒன்றிய அரசு அறிவித்த திட்டத்தின்படி, காவல்துறை விசாரணை முடிந்து பிறகுதான் அவர்களுக்கு உதவித் தொகை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், ஏ.சி.எஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சிறப்பு அலுவலர் மரு.தனவேல், (ஓய்வு), முதல்வர் மரு. சீனிவாசாராஜ், இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து கல்லூரி மாணவிகளுக்கு விழிப்புணர்வு



**சென்னை ஜூலை 07-**

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் சைபர் குற்றங்கள் குறித்து கல்லூரி மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.சென்னையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்ட உரிமைகள்சட்ட உதவிகள்பாதுகாப்பு அம்சங்கள்சமுதாயத்தில் பெண்களின் பங்குதனித்திறன்சட்ட நுணுக்கங்கள் தொடர்பான தகவல்கள் குறித்து விழிப்புணர்வு முகாம்கள் ஊடகங்கள்சமூக வலைதளங்கள் மற்றும் விளம்பரங்கள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தி சமூகத்தில் வன்முறையைக் குறைக்கவும்பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை குறைக்கவும் சென்னை காவல் ஆணையர் அருண் உத்தரவின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இதன் தொடர்ச்சியாகமத்திய குற்றப்பிரிவுகூடுதல் ஆணையர் ராதிகா அறிவுரையின் பேரில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு துணை ஆணையர் வனிதாவின் வழிகாட்டுதலின் பேரில் நேற்று முன் தினம் சென்னை தேனாம்பேட்டை பகுதியில் உள்ள ஜே.பி.ஏ.எஸ் பெண்கள் கல்லூரியில் மாணவிகளுக்கு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் சைபர் குற்றங்கள் குறித்தும் அவற்றை முன்கூட்டியே அறிந்து தடுப்பது பற்றியும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் சென்னை காவல்வரதட்சணை தடுப்பு பிரிவு உதவி ஆணையர் ரித்து சிறப்பு விருந்தினராகவும்குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு ஆய்வாளர் மகாலட்சுமி மற்றும் சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் மேனகா ஆகியோர் கலந்து கொண்டு பாலியல் தொல்லைவேலை செய்யும் இடத்தில் பெண்கள் நடந்துகொள்ளும் விதம்பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தும்அதிலிருந்து பாதுகாத்துக்கொள்வது குறித்தும்பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலில் இருந்து பாதுகாத்துக் கொள்வது குறித்தும் மற்றும் பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் குறித்தும் விளக்கினர்.மேலும்கல்லூரி மாணவிகள் அவசர உதவிக்கு காவல் உதவி செயலி பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவது பெண்களுக்கான உதவி எண்.1091 குழந்தைகளுக்கான உதவி எண்.1098 ஆகிய அவசர அழைப்புகளை பயன்படுத்தி பயனடைவது குறித்தும் விளக்கினர். நிகழ்ச்சியில் 300க்கும் மேற்பட்ட மாணவிகள்கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் காவல் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சி பள்ளியில்

# உணவு கழிவு மூலம் எரிவாயு உற்பத்தி: அதிகாரிகள் புதுமுயற்சி

**சென்னை ஜூலை 07-**

சென்னை மாநகராட்சி பள்ளியில் உணவு கழிவுகளை எரிவாயுவாக மாற்றும் முயற்சி நடைபெற்று வருகிறது.சென்னை மாநகராட்சியும்கஸ்தூரிபா நகர் குடியிருப்பு சங்கமும் இணைந்து அடையாறில் உள்ள சென்னை அரசுப் பள்ளியில் பயோகாஸ் பிளாண்ட் அமைத்துசுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மையில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த முயற்சியின் மூலம்பள்ளியில் சேகரமாகும் உணவு கழிவுகள் மற்றும் காய்கறி கழிவுகள் வீணாகாமல்பயோகாஸ் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன. பள்ளியில் தினமும் உருவாகும் உணவு கழிவுகள்காய்கறி தோல்கள் உள்ளிட்டவை இந்த பயோகாஸ் பிளாண்ட்டில் மறுசுழற்சி செய்யப்பட்டுசுத்தமான எரிவாயுவாக மாற்றப்படுகின்றன. இந்த பயோகாஸ்பள்ளியின் சமையலறையில் மதிய உணவு மற்றும் மாலை சிற்றுண்டி தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

குறிப்பாகமதிய உணவில் வழங்கப்படும் முட்டைகளை வேகவைப்பதற்கும்மாலை சிற்றுண்டிகளை தயாரிப்பதற்கும் இந்த எரிவாயு பயன்படுத்தப்படுகிறது.இந்த பயோகாஸ் பிளாண்ட் மூலம்தினமும் 75 கிலோ உணவு கழிவுகளைப் பயன்படுத்தி 2 முதல் 3 கிலோ பயோகாஸ் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால்பள்ளியில் பயன்படுத்தப்படும் வர்த்தக எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. இதுபள்ளியின் இயக்க செலவைக் குறைப்பதோடுசுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று எரிசக்தி தீர்வையும் வழங்குகிறது.இந்த முயற்சிதிடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதோடு பள்ளி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் உதவுகிறது. மறுசுழற்சி மற்றும் மீள்பயன்பாட்டின் முக்கியத்துவத்தை மாணவர்கள் இதன் மூலம் கற்றுக்கொள்கின்றனர்.

மேலும்இந்த பயோகாஸ் பிளாண்ட் மூலம் உற்பத்தியாகும் எரிவாயுபுதைபடிவ எரிசக்தியைப் பயன்படுத்துவதைக் குறைத்துபசுமை இல்லவாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்த உதவுகிறது.சென்னை மாநகராட்சியின் இந்த முயற்சிபிற பள்ளிகளுக்கும்குடியிருப்பு பகுதிகளுக்கும் முன்மாதிரியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கஸ்தூரிபா நகர் குடியிருப்பு சங்கத்தின் ஒத்துழைப்புஇந்த திட்டத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இதுபோன்ற முயற்சிகள் சென்னையை சுற்றுச்சூழலுக்கு உகந்த மாநகரமாக மாற்றுவதற்கு வழிவகுக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த பயோகாஸ் பிளாண்ட்உணவு கழிவுகளை மதிப்புகூட்டப்பட்ட வளமாக மாற்றுவதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இதன் மூலம்சென்னை மாநகராட்சி மற்றும் கஸ்தூரிபா நகர் குடியிருப்பு சங்கம்நிலையான வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பயணத்தில் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

# தீவுத்திடலில் வெளி மாநில நபரிடம் செல்போன் திருடியவர் கைது

**சென்னை ஜூலை 07-**

பீகார் மாநிலத்தைச்சேர்ந்த ராகுல்குமார் என்பவர் சென்னை, தீவுத்திடலில் தங்கியிருந்து கம்பி கட்டும் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 29-ந்.தேதி அன்று இரவு செல்போனை அருகில் வைத்து தூங்கி விட்டு, அதிகாலை எழுந்து பார்த்த போது, அவரது ஆப்பிள் ஐ-போன் திருடு போனது தெரியவந்தது. இது குறித்து ராகுல் குமார் கோட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். துறைமுகம் சரக உதவி கமிஷ்னர் பி.ராஜசேகரன் கோட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட தீனா, என்பவரை கைது செய்தனர். மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி தீனா திருடிய செல்போனை விற்பனை செய்து பணம் பெற்று செலவு செய்துள்ளதும், இவர் மீது ஏற்கனவே 3 வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

# மகள் காதல் திருமணம் விரக்தியில் தாய் தற்கொலை

**சென்னை ஜூலை 07-**

மகள் காதல் திருமணம் செய்ததால் விரக்தியடைந்த தாய் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் திருவொற்றியூரில் சோகத்தை ஏற்படுத்தியது. திருவொற்றியூர் சாத்துமா நகரை சேர்ந்தவர் ரமணி (37). இவரது கணவர் தேவேந்திரன். இவர்களுக்கு கார்த்திக் என்ற மகனும்காயத்ரி என்ற மகளும் உள்ளனர். இந்த நிலையில்கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்கணவரிடம் இருந்து பிரிந்து வசித்துவந்த ரமணிவிக்னேஷ் (31) என்பவருடன் வாழ்ந்து வந்துள்ளதாக தெரிகிறது.இதனிடையே காயத்ரிபுதுவண்ணாரப்பேட்டையை சேர்ந்த சாரதி என்பவரை காதலித்து திருமணம் செய்து உள்ளார். ஆனால் இந்த திருமணத்தில் ரமணிக்கு விருப்பம் இல்லை என்று தெரிகிறது. இதன் காரணமாக கடும் விரக்தியில் இருந்து வந்த ரமணி நேற்று முன்தினம் வீட்டின் படுக்கை அறையில் உள்ள மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். தகவலறிந்து வந்த திருவொற்றியூர் போலீசார் ரமணி உடலை பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். மேலும் இதுகுறித்து வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஐஸ்அவுஸ் காவல் நிலைய கொலை முயற்சி வழக்கில் 4 பேர் கைது

**சென்னை ஜூலை 07**

சென்னை, திருவல்லிகேணி பகுதியில் குமரேசன், என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த 4 ந் தேதி மதியம், கோயா அருணகிரி 4வது தெரு அருகே அவரது மனைவியுடன் பிரியாணி வாங்க நடந்து சென்றபோது, அங்கு ஆட்டோவில் வந்த அறிமுகமான பிரசாந்த், சத்யா, சையத் லத்தீப், அருண் (எ) ஜேம்ஸ் ஆகியோர், ஏற்கனவே ஏற்பட்ட தகராறு காரணமாக மேற்படி குமரேசன் மற்றும் அவரது மனைவிக்கு கொலை மிரட்டல் விடுத்து கத்தியை வீசி கொலை முயற்சி செய்துள்ளனர். குமரேசன் சுதாரித்து கொண்டு சத்தம் போடவும், எதிரிகள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். இது குறித்து குமரேசன் ஐஸ்அவுஸ் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் கொலை முயற்சி உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஐஸ்அவுஸ் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் 1.பிரசாந்த், 2.சத்யா (எ) பாம்பே ராஜ், 3.சையத் லத்தீப், 4.அருண் (எ) ஜேம்ஸ், சென்னை ஆகிய நான்கு நபர்களை கைது செய்தனர். மேலும் அவர்களிடமிருந்து 4 கத்திகள், 3 செல்போன்கள் மற்றும் 1 ஆட்டோ பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி பிரசாந்த் என்பவர் ஐஸ்அவுஸ் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும் இவர் மீது ஏற்கனவே 3 குற்ற வழக்குகள் உள்ளதும், மற்றொரு எதிரி சத்யா (எ) பாம்பே ராஜ் மீது ஏற்கனவே 22 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு குற்றவாளிகளை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

திருமங்கலம் பகுதியில்

# பணம் கொடுக்கல் வாங்கல் தகராறில் வாலிபரை கடத்திய வழக்கில் 4 பேர் கைது

**சென்னை ஜூலை 07-**

நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த ராகுல், என்பவர் பி.டெக் முடித்து விட்டு திருமங்கலம் பகுதியில் தங்கியிருந்து ஒரு தனியார் நிறுவனத்தில் தொழிற்பயிற்சி கற்று வருகிறார். ராகுல் அவரது சொந்த தேவைக்காக சஞ்சய் என்பவரிடம் ரூ.85 ஆயிரம் வட்டிக்கு கடன் வாங்கியுள்ளார். கடந்த மாதம் ராகுல் வட்டி தொகை செலுத்தாத காரணத்தால் சஞ்சய் பணம் கேட்டு மிரட்டியுள்ளார். இந்நிலையில் ராகுல் கடந்த 02.ந் தேதி அன்று வீட்டிலிருந்த போது அங்கு கார் மற்றும் இருசக்கர வாகனத்தில் வந்த சஞ்சய் உட்பட சிலர் ராகுலிடம் வட்டி பணம் கேட்டு அவதூறாக பேசி தகராறு செய்து, அவரை வலுக்கட்டாயமாக காரில் மண்ணூர் பேட்டை கடத்திச் சென்று தாக்கியுள்ளனர். பின்னர் ராகுல் வீட்டிலிருந்த டிவி, பாஸ்போர்ட் மற்றும் சான்றிதழ்களை எடுத்து சென்றுள்ளனர். இது குறித்து ராகுல் திருமங்கலம் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

திருமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்டி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.சஞ்சய், 2.தினேஷ், 3.சஞ்சீவ்குமார், மற்றும் 4.பிரதீப், ஆகிய 4 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 கார், 1 இருசக்கர வாகனம் பறிமுதல். டிவி பாஸ்போர்ட் மற்றும் சான்றிதழ்கள் மீட்கப்பட்டது.மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற குற்றவாளிகளை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரிகள் 4 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# மது போதைக்கு அடிமையான 2 பேர் தற்கொலை

**சென்னை ஜூலை 07-**

புளியந்தோப்பு கன்னிகாபுரம் பகுதியை சேர்ந்தவர் அருள்மொழி (55). இவர் வீட்டின் அருகே பெட்டிக் கடை நடத்தி வந்தார். இவரது மனைவி சியாமளா (44). இவர்களுக்கு ஒரு மகன்ஒரு மகள் உள்ளனர்.

மது பழக்கத்தால் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த அருள்மொழி நேற்று முன்தினம் மாலை வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தகவலறிந்து வந்த புளியந்தோப்பு போலீசார்சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

வியாசர்பாடி அம்பேத்கர் தெருவை சேர்ந்தவர் செல்வகுமார் (35)தனியார் நிறுவன ஊழியர். இவருக்கு மனைவி ஒரு மகள்ஒரு மகன் உள்ளனர்.

செல்வகுமார் தினமும் மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்ததால் அவரை மனைவி கண்டித்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் தனது படுக்கை அறையில் உள்ள மின்விசிறியில் செல்வகுமார் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதுகுறித்து செம்பியம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஊட்டியில் நடைபெற்று வரும் கழிப்பறை கட்டுமான பணிகளை விரைவுபடுத்த கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு உத்தரவு



**ஊட்டி, ஜூலை.07-**

ஊட்டி மத்திய பேருந்து நிலையம் பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மந்தமாக நடைபெறும் கழிப்பறை கட்டுமான பணிகளை விரைவுப்படுத்த கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு உத்தரவிட்டுள்ளார்.

மலைகளின் அரசியான நீலகிரி சர்வதேச சுற்றுலாத்தலமாக திகழ்வதால் இங்கு வருடம் முழுவதும் சுற்றுலா பயணிகள் வருகை அதிகளவு உள்ளது. பொதுவாக நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகளில் 90 சதவீதம் பேர் ஊட்டிக்கு வருகின்றனர். மேலும் ஊட்டி சுற்றுவட்டார கிராமங்களில் வசிப்பவர்களும் அரசு அலுவலகங்கள் உள்பட பல்வேறு தேவைகளுக்காக ஊட்டி நகருக்கு வருகின்றனர். இதனால் நகரில் வாகனங்கள் நிறுத்தக்கூட இட வசதி இல்லாத நமக்கு பொதுமக்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. ஆனால் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் கூட்டத்தை கருத்தில் கொள்ளும் போது ஊட்டி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பொதுக் கழிப்பறைகள் வசதி சரிவர இல்லை. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நம்ம டாய்லெட் என்ற பெயரில் கட்டப்பட்ட கழிப்பறைகள் சுகாதார சீர்கேடாக இருந்தது.

இந்தநிலையில், இந்த கழிப்பிடங்களை அகற்றிவிட்டு, கான்கிரீட் கட்டிங்களால் ஆன கழிப்பிடங்கள் கட்டித்தர வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வந்தனர்.

இதைதொடர்ந்து, ஊட்டி நகராட்சி நிர்வாகம் ஊட்டி நகரில் மக்களுக்கு பயன் அளிக்காமல் இருந்த 10 'நம்ம டாய்லட்'களை அகற்றி விட்டு, புதிதாக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.2 கோடி செலவில் 10 சமுதாய கழிப்பிடங்கள் தலா ரூ.20 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

இவற்றில் ஊட்டி நகரில் கேசினோ சந்திப்பு, ஏடிசி., மத்திய பஸ் நிலையம் மற்றும் பிங்கர்போஸ்ட் பகுதிகளில் உள்ள 4 சமுதாய கழிப்பிடங்கள் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு திறக்கப்பட்டது. படகு இல்லம் பகுதியில் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

ஆனால் ஊட்டியின் முக்கிய இடமான பஸ் நிலையம் எதிரில் கழிப்பறை கட்டுமான பணிகள் மிகவும் தாமதமாகி வருகிறது. இதைத்தொடர்ந்து கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் சென்று கழிப்பறை கட்டுமான பணிகளை ஆய்வு செய்து கூடுதல் ஆட்களை வைத்து பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார். இதேபோல் ஊட்டி மார்க்கெட் பகுதியையும் ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்த அறிவுறுத்தினார். அப்போது அவருடன் நகராட்சி பொறியாளர் சேகரன் உள்பட பலர் இருந்தனர்.

# நீலகிரியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் விண்ணப்பம் வழங்கும் பணி இன்று முதல் தொடங்குகிறது: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

**ஊட்டி, ஜூலை.07-**

நீலகிரியில் உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டம் விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி இன்று(07.07.2025 )முதல் தொடங்கவுள்ளது என மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார். அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் துவக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. அந்தவகையில், நீலகிரி மாவட்டத்தில் நகர்ப்புற பகுதிகளில் 65 முகாம்களும், ஊரக பகுதிகளில் 81 முகாம்களும் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின்உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். முதற்கட்டமாக 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமானது எதிர்வரும் 15.07.2025 முதல் 14.08.2025 வரை ஊட்டி, கோத்தகிரி, குன்னூர் மற்றும் குந்தா ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் பகுதிகளிலும், 16.08.2025 முதல் 14.09.2025 வரை ஊட்டி, குந்தா, பந்தலூர் ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் பகுதிகளிலும், 15.09.2025 முதல் 14.10.2025 வரை ஊட்டி, பந்தலூர் மற்றும் கூடலூர் வட்டங்களுக்குட்பட்ட

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் பகுதிகளில் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, சுமார் 650 தன்னார்வலர்கள் நியமனம் செய்யப்பட்டு, மேற்படி தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று வரவிருக்கும் முகாம்களின் தேதி மற்றும் இடம் குறித்து குடியிருப்பாளர்களுக்குத் தெரிவிப்பார்கள். விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி 07.07.2025 முதல் தொடங்கவுள்ளது.

முகாமில் வழங்கப்படும் பல்வேறு அரசுத் திட்டங்கள் மற்றும் சேவைகள், தகுதி அளவுகோல்கள் மற்றும் இந்த சேவைகளைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு தன்னார்வலர்கள் விளக்குவார்கள். வழங்கப்படும் சேவைகளின் பட்டியல், இந்த சேவைகளைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் படிவம் அடங்கிய துண்டுப் பிரசுரம் குடிமக்களின் வீடுகளுக்குச் செல்லும் போது தன்னார்வலர்களால் விநியோகிக்கப்படும்.

கூடுதலாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள பெண்கள், ஏற்கனவே நடந்த முகாமில் விடுபட்டவர்கள், முகாம்களுக்குச் சென்று முகாம் நடைபெறும் நாளில் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுவார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விண்ணப்பம், முகாம் நடைபெறும் நாளில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைகவுண்டரில்விநியோகிக்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.



**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் சந்தப்பேட்டையில் மாநகராட்சி பொது நிதியிலிருந்து 12.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பிடத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில், மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், உதவி ஆணையர் சரவணன், உதவி பொறியாளர் ஜெகஜீவராமன், இணைப் பொறியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.**

# ஊட்டியில் 7 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.1 கோடி மதிப்பிலான கடனுதவி: இணைப்பதிவாளர் ரா.தயாளன் வழங்கினார்

**ஊட்டி, ஜூலை.07-**


ஊட்டியில் 7 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.1 கோடி மதிப்பிலான கடனுதவிகளை மண்டல இணைப்பதிவாளர் இரா.தயாளன் வழங்கினார்.

நீலகிரி மாவட்டத்தில் அகில உலக கூட்டுறவு ஆண்டு 2025 கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிவிப்பின் அடிப்படையில் ஜூலை மாதம் முதல் சனிக்கிழமையன்று 05.07.2025 அகில உலக கூட்டுறவு தின கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. அகில உலக கூட்டுறவு ஆண்டை கொண்டாடும் விதமாக நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தின் ராவ் பகதூர் ஆரிகவுடர் திருமண மண்டபத்தில் நீலகிரி மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இரா. தயாளன் தலைமையில் 'சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம்' என்ற கருப்பொருளோடு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் கூட்டுறவு கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டன. இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய நீலகிரி மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இரா.தயாளன் உலகத்திலுள்ள 193 நாடுகளும் அனைத்துலகக்கூட்டுறவு நாளைக்கொண்டாடுகின்றன. பட்டினி, பசியால் வாடும் ஏழை மக்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அடிப்படைத்தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் மூன்றையும் வழங்கும் உன்னதப்பணியை கூட்டுறவுகள் வழங்கி வருகின்றன. மேலைநாடுகள் கூட்டுறவின் பயனை முழுமையாகப்பயன்படுத்தி முன்னேற்றம் பெற்றுவிட்டன என்றார்.

' பீடுற்றார் மேற்கில் பிறநாட்டார் என்பதெல்லாம், கூடித்தொழில் செய்யும் கொள்கையினால் தோழர்களே !' என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை நினைவூட்டினார். மேலும் உலகக்கூட்டுறவு ஆண்டான 2025 இல் கூட்டுறவுகள் சிறந்த உலகத்தைக் கட்டமைக்கின்றன!' என்ற மையப்பொருளோடு இந்த விழாவைக்கொண்டாடிக்கொண்டு வருகிறோம்.ஏழை பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகளைக்களைந்து 'புதியதோர் உலகம் செய்வோம்-கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் !!' என்ற புரட்சிக்கவிஞரின் சிந்தனையைச் செயலாக்கம் செய்யப் பாடுபடுவோம்



என்று உறுதிமொழி எடுத்துக்கொள்வோம் என்று சிற்றுரை ஆற்றி விழிப்பணர்வு ஏற்படுத்தினார். விழாவில் பி. மணியட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் 5 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், குருத்துக்குளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் 2 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் 'ரூபாய் ஒரு கோடி' மதிப்பிலான கடன் உதவி வழங்கப்பட்டது. கூட்டுறவு நிறுவனங்களில் சிறப்பாக பணிபுரிந்த பணியாளர்களுக்கு பாராட்டு பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நடைபெற்ற பேச்சுப் போட்டி, கவிதை போட்டி ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற எப்பநாடு அரசு உயர்நிலை பள்ளி மாணவர்கள், தும்மனட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை நிலைய உதகை கிளை மாணவர்களுக்கு நடைபெற்ற கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டி ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவியர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. விழாவின் முக்கிய நிகழ்வாக கடந்த பிப்ரவரி 24 ஆம் நாள் எல்லார்க்கும் எல்லாம் என்ற இலக்கோடு செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் 1000 முதல்வர் மருந்தகங்களைத் திறந்து வைத்தார். நீலகிரியில் செயல்படும் முதல்வர் மருந்தகங்களில் சிறப்பாகச்செயல்படும் மருந்தகங்கள் க்குப் பாராட்டி சான்றிதழும் வழங்கினார். கூட்டுறவு சார்பதிவாளர் யோகேஸ்வரன் இந்நிகழ்ச்சியை கூட்டுறவு சார்பதிவாளர் கார்த்திகேயன் வரவேற்புரை வழங்கினார். கூட்டுறவு சார்பதிவாளர் ரா. கௌரி சங்கர் திட்ட விளக்க உரையாற்றினார். பின்னர் முன்னிலை உரையாற்றிய துணைப்பதிவாளர் திரு சி. அய்யனார் அகில உலக கூட்டுறவு ஆண்டு கொண்டாட்டத்தின் மாதாந்திர நிகழ்வுகளை எடுத்துரைத்தார். குன்னூர் கூட்டுறவு நகர வங்கி மேலாண்மை இயக்குநர் சு. குமாரசுந்தரம், நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் மரு. தே. சித்ரா, நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க மேலாண்மை இயக்குநர் தா. முத்துக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்ச்சியின் இறுதியாக கூட்டுறவு சார்பதிவாளர் முத்துராமலிங்கம் நன்றியுரை கூறினார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அலுவலர்கள், கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் மற்றும் பயனாளிகள் ஆகிய 300-க்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு இந்து கல்வி நிலைய மாணவர் ஸ்ரீவத்சனுக்கு பிளஸ் 2 பொதுத் தேர்வில் ஐந்து - மதிப்பெண் குறைவாக இருந்தது. மறுகூட்டலுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதில் 600 க்கு 597 மதிப்பெண் பெற்றுள்ளார். இதை பாராட்டி பள்ளியின் நிறுவனத் தலைவர் கே.கே. பாலுசாமி சார்பாக பள்ளியின் பொருளாளர் வி.மஞ்சுளா ரூ.10 ஆயிரம் பரிசு வழங்கினார்.

# 525-வது மலைச்சாரல் கவியரங்கம்



**ஊட்டி, ஜூலை.07-**

கீழடி நம் தாய்மடி என்ற தலைப்பில் நீலகிரி மாவட்ட மலைச்சாரல் 525வது மாதாந்திர கவியரங்கம் ம. பிரபு தலைமையில், தலைவர் கே. எம் பௌ;ளி முன்னிலையில் நடைப்பெற்றது.

கவிஞர் ஜனார்தனன் நீலமலை ஜே பி, சுந்தரபாண்டியன், ரமேஷ,; மணி, அர்ஜூணன், அமுதவல்லி, பீனா, மகேந்திரன், சரவணராஜன், ஞான சேகர,; புலவர் இர. நாகராஜ் ஆகியோர் கவிதைகளை படித்தனர்.

கவிதை நூல் தொகுப்பை விரைவில் வெளியிடுவது என மன்றத்தில் முடிவு மேற்கொள்ளப்பட கவிஞர் ஞானசேகர் நன்றி நவில்தலுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

# அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபை கூட்டம்

**ஈரோடு, ஜூலை.7 -**

ஈரோடு மாவட்டத்தில் 2025-2026-ம் நிதி ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செலவின ஆண்டு 2024-2025 வரையிலான செயல்பாடுகளின் செலவினங்கள் மீதான சமூக தணிக்கை மேற்கொண்டு சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற உள்ளது. கிராம சபை நடைபெறும் நாள், இடம், நேரம் ஆகியன தொடர்புடைய கிராம ஊராட்சி மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.கிராம சபை கூட்டம் நடைபெறும் அனைத்து ஊராட்சிக ளிலும் கூட்டம் முறையாக நடைபெறுவதை கண்காணிக்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்டகலெக் டர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# சித்தோடு ஒழுங்குமுறை கூடத்தில் ரூ.19 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

**சித்தோடு, ஜூலை.7-**

சித்தோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மஞ்சள் ஏலம் நடைபெற் றது. இந்த ஏலத்துக்கு சித்தோடு மற் றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 21 மூட்டைகளில் மஞ்சளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண் காணிப்பாளர் லட்சுமணன் முன்னிலையில் ஏலம் நடந்தது. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.11 ஆயிரத்து 168-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.11 ஆயிரத்து 599-க்கும் என மொத்தம் ரூ.19 லட்சத்துக்கு ஏலம் போனது.

# ஈரோடு பஸ் நிலையத்தில் ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றம்

**ஈரோடு, ஜூலை.7 -**

ஈரோடு பஸ் நிலையத்தில் போக்குவரத்துக்கும், பயணிகளுக்கும் இடையூறாக ஆக்கிரமித்து கடைகள் அமைக்கப்பட்டு உள்ளதாக ஈரோடு மாநகராட்சி அதிகாரிகளுக்கு புகார் சென்றது. இதையடுத்து மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின் தலைமையிலான அதிகாரிகள் பஸ் நிலையத்தில் திடீர் ஆய்வு செய்தனர். அப்போது பஸ்கள் உள்ளே வரும் வாசுகி வீதி, நாச்சியப்பா 2-வது வீதி ஆகிய இடங்களில் அவர் பார்வையிட்டார். அப்போது சாலையோரமாக உள்ள கடைகளில் இருந்த ஆக்கிரமிப்புகளையும், விளம்பர பலகைகளையும் அகற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதையடுத்து சாலையோர ஜவுளிக்கடை, குளிர்பான கடை,செருப்பு கடை, கம்மங்கூழ் கடைகள் அகற்றப்பட் டன.

# கரூர் மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதலமைச்சர் முடிவுற்ற 13 புதிய திட்ட பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார் எம்.எல்.ஏ. வி.செந்தில்பாலாஜி தகவல்

**கரூர்,ஜூலை.07-**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கரூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்வதையொட்டி நிகழ்ச்சி நடைபெறும் கரூர் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் விழா முன்னேற்பாடு பணிகளை மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் V செந்தில்பாலாஜி , கலெக்டர் மீ.தங்கவேல், தலைமையில் பார்வையிட்டார்கள்.

இது குறித்து கரூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவுப்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகின்ற 09.07.2025 அன்று கரூரில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொண்டு ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம், கரூர் காமராஜர் தினசரி மார்க்கெட், வெங்கமேடு மீன் அங்காடி, கலெக்டர் அலுவலக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள அறிவியல் பூங்கா உள்ளிட்ட பல்வேறு திட்ட பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்க உள்ளார்கள். அதேபோல் வீட்டுமனை பட்டாக்கள் உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை 18,331 பயனாளிகளுக்கு ரூ.162.25 கோடி மதிப்பீட்டில் வழங்க உள்ளார்கள். கரூர் மாவட்ட மக்களின் நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கும் வகையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கரூர் மாவட்டத்திற்கு வருகை தருவது வரலாற்று சிறப்புமிக்க மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகும்.

மேலும் புதிய பேருந்து நிலையம் திறந்து வைத்த பின்பு முதல் கட்டமாக கோவை மற்றும் சேலம் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு பழைய பேருந்து நிலையம் சென்று அங்கிருந்து தங்களது வழித்தடத்தில் பயணத்தை மேற்கொள்ளும், அதேபோல் திருச்சி மற்றும் திண்டுக்கல் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு புதிய பேருந்து நிலையம் வந்த பின்னர் தனது வழித்தடத்தில் பயணத்தை மேற்கொள்ளும். மேலும் பழைய பேருந்து நிலையத்திற்கும் புதிய பேருந்து நிலையத்திற்கும் இணைப்பு நகர பேருந்துகள் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது என மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் V செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க. சிவகாம சுந்தரி(கிருஷ்ணராயபுரம்) மற்றும் கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா , கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், துணை மேயர் ப. சரவணன், மாநகராட்சி ஆணையர் கே. எம். சுதா, மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ். ஆர்.எஸ். ராஜா. க. அன்பரசன், எஸ். சக்திவேல், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமதுபைசல் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# பெண் போலீசாருக்கு பணி பாதுகாப்பு ஆலோசனை கூட்டம்

**ஈரோடு, ஜூலை.7-**

ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் பெண் போலீசாருக்கு பணி பாதுகாப்பு குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுஜாதா தலைமை தாங்கினார். இதில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் அனுராதா, கவிதா லட்சுமி, ராஜநளாயினி ஆகியோர் கலந்துகொண்டு பேசினர். அப் போது, பெண் போலீசார் பணியில் இருக்கும்போது மேற் கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், பணியில் ஆபத்து நேரிட்டால் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், மனஉளைச்சல் இருந்தால் உயர் அதிகாரிகளிடம் புகார் தெரி விப்பது போன்ற ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்த கூட்டத்தில் பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், ஏட்டுகள், போலீஸ்காரர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர்களுக்கான பணியிட மாறுதல் கலந்தாய்வு

**ஈரோடு, ஜூலை.7 -**

முதுகலை பட்டதாரி ஆசிரி யர்கள் ஈரோடு மாவட்டத்துக் குள் பணியிட மாறுதல் பெறு வதற்கான கலந்தாய்வு ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி அலுவலகத் தில் நடைபெற்றது. இதில் பணியிட மாறுதல் பெற்ற ஆசிரியர்களுக்கு அதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. இன்று (திங்கட்கிழமை) முது கலை பட்டதாரி ஆசிரியர்க ளுக்கு மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதலுக்கான கலந்தாய்வு நடைபெறுகிறது

# சமூக நல்லிணக்க ஊராட்சி விருதுக்கு விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் கந்தசாமி தகவல்

**ஈரோடு, ஜூலை.7 -**

சாதி பாகுபாடற்ற சமூக நல் லிணக்கத்தையும், சமூக ஒற்றுமையையும் கடைப்பிடிக்கும் ஊராட்சிகளை ஊக்குவித்து கவுரவிக்கும் வகையில், தகுதி படைத்த 10 ஊராட்சிகளுக்கு சமூக நல்லிணக்க ஊராட்சி விருதுடன் தலா ரூ.1 கோடி வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. அதன் படி 2025-ம் ஆண்டுக்கான சமூக நல்லிணக்க ஊராட்சி விருது பெற விரும்புவோர் விண்ணப்ப படிவத்துடன், அதற்குரிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பிக்க லாம்.https://tinyurl.com/Panchayataward அல்லது https://cms.tn.gov.in/cms-migrated/document/forms/Samooga-Nallinakka-Ooraatchi-Award-Application.pdfஇணையதளத்தில் இருந்து இந்த விருதுக்கான விண் ணப்ப படிவத்தை பதிவிறக் கம் செய்து கொள்ளலாம். அல்லது ஈரோடு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நல அலுவலகத்தி லும் விண்ணப்ப படிவத்தை பெற்று கொள்ளலாம் என்று மாவட்ட கலெக்டர் கந்த சாமி தெரிவித்துள்ளார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## இங்கி.க்கு எதிரான 2-வது டெஸ்ட்:
# இந்தியா அபார வெற்றி

**பர்மிங்காம், ஜூலை 07-**

ஆகாஷ் தீப் அபார பந்து வீச்சு காரணமாக, இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்டில் இந்திய அணி அபாரமாக வெற்றி பெற்றது.



**587 ரன்கள்...**

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நடந்தது. இதில் முதல் இன்னிங்சில் கேப்டன் சுப்மன் கில்லின் இரட்டை சதத்தின் (269 ரன்) உதவியுடன் இந்திய அணி 587 ரன்கள் குவித்தது. அடுத்து முதல் இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து அணி 407 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. ஜேமி சுமித் (184 ரன்), ஹாரி புரூக் (158 ரன்) சதம் அடித்தனர்.

**டிக்ளேர்...**

பின்னர் 180 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 3-வது நாள் முடிவில் ஒரு விக்கெட்டுக்கு 64 ரன்கள் எடுத்திருந்தது. லோகேஷ் ராகுல் 28 ரன்னுடனும், கருண் நாயர் 7 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று முன்தினம் 4-வது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து பேட்டிங் செய்த இந்திய அணி 2-வது இன்னிங்சில் 83 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 427 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

**608 ரன்கள் இலக்கு...**

ரவீந்திர ஜடேஜா 69 ரன்னுடனும், வாஷிங்டன் சுந்தர் 12 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். சுப்மன் கில் 161 ரன்னில் (162 பந்து, 13 பந்து, 8 சிக்சர்) சோயிப் பஷீர் பந்து வீச்சில் அவரிடமே கேட்ச் கொடுத்து பெவிலியன் திரும்பினார். இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 608 ரன்களை வெற்றி இலக்காக இந்தியா நிர்ணயித்தது. இதைத்தொடர்ந்து இமாலய இலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்து அணி ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்கு 72 ரன்கள் அடித்துள்ளது. ஆலி போப் 24 ரன்னுடனும், ஹாரி புரூக் 15 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் ஆகாஷ் தீப் 2 விக்கெட்டும், முகமது சிராஜ் ஒரு விக்கெட்டும் வீழ்த்தியுள்ளனர்.

**மழையால் தாமதம்...**

கடைசி நாளில் இங்கிலாந்தின் வெற்றிக்கு 536 ரன்களும், இந்திய அணியின் வெற்றிக்கு 7 விக்கெட்டுகளும் தேவைப்பட்டது. இந்த நிலையில், கடைசி நாள் ஆட்டம் மழையால் தாமதம் ஆனது. மழை நின்ற பிறகு மீண்டும் ஆட்டம் தொடங்கப்பட்டு இங்கிலாந்து அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்தது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே இங்கிலாந்து அணியின் இரண்டு விக்கெட்டுகளை ஆகாஷ் தீப் வீழ்த்தி அசத்தினார். ஆலி போப் மற்றும் ஹாரி ப்ரூக்கின் விக்கெட்டினை அவர் கைப்பற்றினார்.

**தடுமாற்றம்...**

கடைசி நாள் உணவு இடைவெளியின் போது 6 விக்கெட் இழப்பிற்கு 153 ரன்கள் எடுத்து தடுமாறி வருகிறது. இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியா தரப்பில் ஆகாஷ் தீப் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார். இறுதியில் இந்திய அணி அபாரமாக வெற்றிப்பெற்று தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது.

## ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை:
# நிர்வாகிகளுடன் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

**சென்னை, ஜூலை 07-**



ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் தி.மு.க. நிர்வாகிகளுடன் தொலைபேசியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியுள்ளார்.

ஓரணியில் தமிழ்நாடு எனும் பெயரில் உறுப்பினர் சேர்க்கை, தேர்தல் பரப்புரையை தி.மு.க. தொடங்கியுள்ளது. தி.மு.க. நிர்வாகிகளிடம் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் விவரங்களை கேட்டறிந்தார். வீடு வீடாகச் சென்று தேர்தல் பரப்புரையை தி.மு.க. நிர்வாகிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## டெஸ்ட் கிரிக்கெட்டில்
# ஜேமி சுமித் அபார சாதனை

**பர்மிங்காம், ஜூலை 07-**

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு போட்டியில் அதிக ரன் அடித்த இங்கிலாந்து விக்கெட் கீப்பர் என்ற மகத்தான சாதனையை படைத்தார்.

**2-வது டெஸ்ட்...**

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நடந்தது. இதில் முதல் இன்னிங்சில் கேப்டன் சுப்மன் கில்லின் இரட்டை சதத்தின் (269 ரன்) உதவியுடன் இந்திய அணி 587 ரன்கள் குவித்தது. அடுத்து முதல் இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து அணி 407 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. ஜேமி சுமித் (184 ரன்), ஹாரி புரூக் (158 ரன்) சதம் அடித்தனர்.

**608 ரன் இலக்கு...**

பின்னர் 180 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 83 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 427 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. ரவீந்திர ஜடேஜா 69 ரன்னுடனும், வாஷிங்டன் சுந்தர் 12 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். சுப்மன் கில் 161 ரன்னில் அவுட்டானார். இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 608 ரன்களை வெற்றி இலக்காக இந்தியா நிர்ணயித்தது. இதைத்தொடர்ந்து இமாலய இலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்து அணி கடைசி நாள் உணவு இடைவெளியின் போது 6 விக்கெட் இழப்பிற்கு 153 ரன்கள் எடுத்து தடுமாறி வருகிறது

**ஜேமி சுமித் சாதனை...**

இந்த போட்டியின் முதல் இன்னிங்சில் 184 ரன்கள் அடித்த இங்கிலாந்து விக்கெட் கீப்பர் ஜேமி சுமித் 2-வது இன்னிங்சில் 22 ரன்கள் அடித்திருந்தபோது சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு போட்டியில் அதிக ரன் (184+22 = 206 ரன்கள்) அடித்த இங்கிலாந்து விக்கெட் கீப்பர் என்ற மகத்தான சாதனையை படைத்தார்.

### ஒரு போட்டியில் அதிக ரன்

1. ஜேமி சுமித் - 206 ரன்கள்*
2. அலெக் ஸ்டீவார்ட் - 204 ரன்கள்
3. ஜானி பேர்ஸ்டோவ் - 199 ரன்கள்
4. ஆலன் நாட் - 197 ரன்கள்

## புரூக்குக்கு ரிஷப் பதிலடி

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நடந்தது. இதில் முதல் இன்னிங்சில் கேப்டன் சுப்மன் கில்லின் இரட்டை சதத்தின் (269 ரன்) உதவியுடன் இந்திய அணி 587 ரன்கள் குவித்தது. அடுத்து முதல் இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து அணி 407 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. பின்னர் 180 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 6 விக்கெட்டுக்கு 427 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. இதைத்தொடர்ந்து இமாலய இலக்கை நோக்கி இங்கிலாந்து அணி ஆடியது.

முன்னதாக இப்போட்டியில் 4வது நாளில் ரிஷப் பண்ட் அதிரடியாக விளையாடி அரைசதம் அடித்தார். 10 ரன்னில் இருக்கையில் கேட்ச் கண்டத்தில் இருந்து தப்பிய ரிஷப் 48 பந்துகளில் தனது 16-வது அரைசதத்தை எட்டினார். அந்த சமயத்தில் அதிரடியாக விளையாடிய பண்டின் கவனத்தை சீர்குலைக்கும் நோக்கத்தில் இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் ஸ்லிப் பகுதியில் நின்றுக்கொண்டு சீண்டினார். அதற்கு ரிஷப் பண்ட் தக்க பதிலடி கொடுத்தார். இது குறித்து அவர்களுக்கிடையே நடந்த உரையாடல் பின்வருமாறு:- ஹாரி புரூக்: உங்களுடைய வேகமான சதம் என்ன? ரிஷப் பண்ட்: டெஸ்ட் கிரிக்கெட்டிலா? 80-90 பந்துகள்

புரூக்: நான் 55 பந்துகளில் வேகமான சதம் அடித்துள்ளேன். நீங்களும் இன்று அதைச் செய்யலாம்.

ரிஷப் பண்ட்: பரவாயில்லை. எனக்கு சாதனைகள் மீது அவ்வளவு பேராசை இல்லை. அது நடந்தால் நடக்கட்டும். இவ்வாறு அவர்களுக்கு இடையிலான உரையாடல் அமைந்தது.

## விராட் கோலி வாழ்த்து

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் எட்ஜ்பாஸ்டனில் நடைபெற்றது. முதல் இன்னிங்சில் இந்தியா 587 ரன்கள் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்சில் விளையாடிய இங்கிலாந்து 407 ரன்னில் ஆல் அவுட் ஆனது. 180 ரன்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்சை ஆடிய இந்தியா 427 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. இதன்மூலம் இங்கிலாந்துக்கு 608 ரன்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இப்போட்டியில் முதல் இன்னிங்சில் 269 ரன்கள் குவித்த கில் 2 ஆவது இன்னிங்சில் 161 ரன்கள் குவித்தார். இதன்மூலம் ஒரு டெஸ்ட் போட்டியில் அதிக ரன்கள் குவித்த இந்திய வீரர் என்ற சாதனையை கில் படைத்தார். எட்ஜ்பாஸ்டன் டெஸ்டில் 430 ரன்கள் குவித்த கேப்டன் கில்க்கு முன்னாள் கேப்டன் விராட் கோலி வாழ்த்து தெரிவித்துள்ளார். கோலி தனது இன்ஸ்டா ஸ்டோரியில், "அருமை ஸ்டார் பாய். வரலாற்றை மாற்றும் ஒரு ஆட்டத்தின் தொடக்கம் மேலும் மேலும் வளரட்டும். எல்லா பாராட்டுகளுக்கும் நீ தகுதியானவன்" என்று தெரிவித்துள்ளார்.

## தங்கம் வென்ற சோப்ரா

இந்திய நட்சத்திர ஈட்டி எறிதல் வீரரும் ஒலிம்பிக் சாம்பியனுமான நீரஜ் சோப்ரா பெங்களூருவில் தனது பெயரில் நடைபெற்ற முதல் 'நீரஜ் சோப்ரா கிளாசிக் 2025' போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய மண்ணில் நீரஜ் போட்டியிடுவதைக் காண ஸ்ரீ கண்டீரவா மைதானத்தில் ஏராளமான ரசிகர்கள் கூடியிருந்தனர். அவர்களின் ஆரவாரங்களுக்கு மத்தியில், நீரஜ் ஒரு தனித்துவமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

சனிக்கிழமை நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில், நீரஜ் தனது மூன்றாவது முயற்சியில் 86.18 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து முதலிடம் பிடித்தார். கென்யாவின் ஜூலியஸ் யெகோ 84.51 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இலங்கை தடகள வீரர் ருமேஷ் பதிரேஜ் 84.34 மீட்டர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தை வென்றார். மற்றொரு இந்திய தடகள வீரர் சச்சின் யாதவ் 82.23 மீட்டர் தூரம் எறிந்து நான்காவது இடத்தைப் பிடித்தார். நீரஜ் சோப்ரா இந்தப் போட்டியின் அமைப்பாளராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த போட்டியில் 200 ரன்கள் குவிப்பேன்: வைபவ் சூர்யவன்ஷி

**லண்டன், ஜூலை 07-**

அடுத்தப் போட்டியில் 200 ரன்கள் குவிக்க முயற்சி செய்வேன் என்று இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷி தெரிவித்தார்.

**சூர்யவன்ஷி சதம்...**

19 வயதிற்கு உட்பட்டோருக்கான இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற 4ஆவது போட்டியில் இந்தியா முதலில் பேட்டிங் செய்து 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 363 ரன்கள் குவித்தது. தொடக்க வீரர் வைபவ் சூர்யவன்ஷி 78 பந்தில் 13 பவுண்டரி, 10 சிக்சர்களுடன் 143 ரன்கள் விளாசினார். 52 பந்தில் சூர்யவன்ஷி சதம் விளாசினார்.

**சாதனை...**

இதன்மூலம் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான இளையோர் கிரிக்கெட்டில் அதிவேகமாக சதம் விளாசிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்னதாக பாகிஸ்தான் வீரர் கம்ரான் குலாம் 53 பந்தில் சதம் அடித்திருந்தார். மேலும், 10 சிக்சர்கள் அடித்து ஒரு போட்டியில் அதிக சிக்ஸ் அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். ஐ.பி.எல். தொடரில் 35 பந்தில் சதம் விளாசி சாதனைப் படைத்திருந்தார்.

**200 ரன்கள் குவிக்க...**

அதிவேக சதம் விளாசி 143 ரன்கள் குவித்த பின்பு பேசிய வைபவ் சூர்யவன்ஷி, "சுப்மன் கில் 100 மற்றும் 200 ரன்கள் எடுத்தபோது அவரிடமிருந்து எனக்கு நிறைய உத்வேகம் கிடைத்தது. அடுத்தப் போட்டியில் 200 ரன்கள் குவிக்க முயற்சி செய்வேன். 50 ஓவர்களும் களத்தில் நிலைத்து நின்று விளையாட முயல்வேன். எவ்வளவு அதிக ரன்கள் குவிக்கிறேனோ, அணிக்கு அவ்வளவு சாதகம் தான்" என்று தெரிவித்தார்.

# கவாஸ்கரின் 54 ஆண்டுகால சாதனையை முறியடித்த கில்



**பர்மிங்காம், ஜூலை 07-**

இந்திய அணியின் கேப்டன் ஷுப்மன் கில் அதிக ரன்கள் குவித்து இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சுனில் கவாஸ்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.

**180 ரன்கள் முன்னிலை...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி பர்மிங்ஹாமில் நடைபெற்றது. முதலில் விளையாடிய இந்திய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 587 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் 407 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம், இந்திய அணி இங்கிலாந்தைக் காட்டிலும் 180 ரன்கள் முன்னிலை பெற்றது. 180 ரன்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கி இந்திய அணி விளையாடியது.

**ராகுல் அரைசதம்...**

இந்திய அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 300 ரன்களைக் கடந்து விளையாடி வருகிறது. யஷஸ்வி ஜெய்ஸ்வால் 28 ரன்கள், கருண் நாயர் 26 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். சிறப்பாக விளையாடிய கே.எல்.ராகுல் அரைசதம் கடந்தார். அவர் 84 பந்துகளில் 55 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 10 பவுண்டரிகள் அடங்கும்.

**கில் சதம்...**

இதனையடுத்து, ஜோடி சேர்ந்த கேப்டன் ஷுப்மன் கில் மற்றும் துணைக் கேப்டன் ரிஷப் பந்த் சிறப்பாக விளையாடி அணியின் ஸ்கோரை உயர்த்தினர். அதிரடியாக விளையாடிய ரிஷப் பந்த் 58 பந்துகளில் 65 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 8 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் அடங்கும். சிறப்பாக விளையாடிய கேப்டன் ஷுப்மன் கில் சதம் விளாசி அசத்தினார்.

**சாதனை முறியடிப்பு...**

சதம் விளாசியதன் மூலம், டெஸ்ட் போட்டி ஒன்றில் இந்திய அணிக்காக அதிக ரன்கள் குவித்த (இரண்டு இன்னிங்ஸ்களையும் சேர்த்து) வீரர் என்ற சாதனையை கேப்டன் ஷுப்மன் கில் படைத்துள்ளார். இதற்கு முன்பாக, கடந்த 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றில் முன்னாள் இந்திய கேப்டன் சுனில் கவாஸ்கர் 344 ரன்கள் எடுத்திருந்ததே அதிகபட்ச ரன்களாக இருந்தது. 54 ஆண்டுகளாக தொடர்ந்த இந்த சாதனையை தற்போது ஷுப்மன் கில் முறியடித்துள்ளார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கேரம் சாம்பியன் எம்.காசிமாவின் வேண்டுகோளை செயல்படுத்தும் வகையில் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செரியன் நகர் பகுதியில் தி.மு.க இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் அமைக்கப்பட்டுள்ள கேரம் விளையாட்டு பயிற்சி மையத்தை திறந்து வைத்து, பயிற்சியை தொடங்கி வைத்தார்.



அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை, சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் நேற்று அ.தி.மு.க. கழக அமைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள வெங்கடேஷ்பாபு நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# அமைச்சர் சிவசங்கரை யார் என்று கேட்ட அரசு பஸ் டிரைவர், கண்டக்டர்

**அரியலூர், ஜூலை 07-**

திடீர் ஆய்வில் ஈடுபட்ட அமைச்சர் சிவசங்கரை யார் என்று அரசு பஸ் டிரைவர், கண்டக்டர் கேட்ட சம்பவம் நடந்துள்ளது.

கோவையில் கொடீசியா வளாகத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்சியில் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு 100 புதிய பேருந்துகளின் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதையடுத்து நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு இரவு தனது காரின் மூலமாக அரியலூர் நோக்கி புறப்பட்டார்.

அப்போது அமைச்சர் சிவசங்கர் கரூர்-மாயனூர் இடையே ஒரு உணவகத்தில் காரை நிறுத்தி டீ குடித்தார். அந்த உணவகத்தில் அரசு பஸ்சும் நிறுத்தப்பட்டிருந்தது. பஸ் டிரைவர், கண்டக்டர் அங்கு சாப்பிட்டு விட்டு வெளியே வந்தனர்.

இதை கவனித்த அமைச்சர் சிவசங்கர் தனியாக சென்று அந்த டிரைவர் கண்டக்டரிடம் பேச்சு கொடுத்தார். அப்போது அவர்களிடம் உணவு மற்றும் காபி, டீ ஆகியவற்றை உண்பதற்கு உங்களுக்கென்று குறிப்பிட்ட இடத்தினை அரசு ஒதுக்கி இருக்கிறது. அங்கு நிறுத்தாமல் ஏன் இங்கு நிறுத்துகிறீர்கள். உங்களின் இந்த செயல்பாடுகள் குறித்து முதலமைச்சரின் கவனத்திற்கு சென்றால் யார் பதில் சொல்வது என்று வினவியுள்ளார்.

அமைச்சர் பேண்ட், சர்ட்டுடன் பயணியை போல இருந்ததால் சரியாக அடையாளம் கண்டு கொள்ளாத அப்போது அவர்கள் சற்று புலம்பியவாறு ஏன் சார் இதெல்லாம் கேட்குறீங்க? உங்க வேலையை பருங்க என்பது போல பதில் அளித்துள்ளனர். உடனே அமைச்சர் சிரித்தவாறு, நான் யார் என்று உங்களுக்கு தெரிகிறதா? என கேட்டார்.

நீங்க யாருன்னு தெரியலையே என டிரைவர், கண்டக்டர் கூறினார்கள். அதற்கு அமைச்சர் சிவசங்கர், நான் தான்பா உங்கள் போக்குவரத்து துறை அமைச்சர் என கூறியதும் அதிர்ச்சி அடைந்த டிரைவர், கண்டக்டர் இருவரும் அவரிடம் என்ன சொல்வது என தெரியாமல் விழித்தனர். உடனே அமைச்சர் சிவசங்கர், இனி இதுபோன்று நடக்காமல் உங்களுக்கு உரிய இடங்களில் மட்டும் பேருந்தை நிறுத்தி உணவருந்தி விட்டு எடுத்து செல்லுங்கள் என்று அறிவுரை வழங்கினார்.

அதிர்ச்சியில் இருந்து மீளாத டிரைவர், கண்டக்டர் இருவரும் இனி இது போன்ற தவறுகள் நடக்காது என்று கூறினர். பின்னர் அங்கிருந்து தனது காரில் புறப்பட்டு அரியலூர் நோக்கி சென்றார்.

## திருப்புவனம் காவலாளி அஜித்குமாரின்
# சகோதரர் மருத்துவமனையில் அனுமதி

**திருப்புவனம், ஜூலை 07-**

திருப்புவனம் அஜித்குமாரின் சகோதரன் நவீன்குமார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரத்தில் உள்ள கோவிலில் காவலாளியாக பணியாற்றி வந்த இளைஞர் அஜித்குமார் (வயது 27). இவர் மீது பெண் நிகிதா என்ற பெண் நகை திருட்டு புகார் அளித்தார். புகார் தொடர்பாக அஜித்குமாரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையின்போது போலீசார் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக 5 போலீசார் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இந்த வழக்கு சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இதனிடையே, நகை திருட்டு புகார் தொடர்பாக அஜித்குமாரின் சகோதரன் நவீன்குமாரிடமும் போலீசார் விசாரணை நடத்தியுள்ளனர். விசாரணையின்போது அஜித்குமாரை போன்றே நவீன்குமாரையும் போலீசார் தாக்கியதாக கூறப்படுகிறது. போலீசார் தன்னையும் தாக்கியதாக நவீன்குமார் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அஜித்குமாரின் சகோதரன் நவீன்குமார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்காக நவீன்குமார் அனுமதிக்கப் பட்டுள்ளார். போலீசார் தாக்கியதில் ஏற்பட்ட காயத்தால் ஏற்பட்ட வலியால் சிகிச்சைக்காக நவீன்குமார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# தெலுங்கானாவில் இனி 10 மணி நேர வேலை: மாநில அரசு அறிவிப்பு

**ஹைதராபாத், ஜூலை 07-**

தெலுங்கானாவில் வணிக நிறுவனங்களுக்கான தினசரி வேலை நேரம் 10 மணி நேரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

தெலுங்கானாவில் அரசின் தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் தொழிற்சாலைகள் துறையின் முதன்மைச் செயலாளர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்த புதிய உத்தரவின்படி, கடைகளைத் தவிர்த்து மற்ற வணிக நிறுவனங்களில் தொழிலாளர்களின் தினசரி வேலை நேரம் 8 மணியிலிருந்து 10 மணி நேரமாக அதிகரிக்கப்படுகிறது.

இருப்பினும், வாராந்திர வேலை நேரம் 48 மணி நேர வரம்பை தாண்டக் கூடாது என்ற விதிமுறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். தொழிலாளர்கள் தொடர்ச்சியாக 6 மணி நேரம் வேலை செய்த பிறகு, குறைந்தபட்சம் 30 நிமிட இடைவேளை வழங்கப்பட வேண்டும் என்று இந்த உத்தரவில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் அண்மையில் இதே போன்ற 10 மணி நேர வேலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனைப் பின்பற்றி, தெலங்கானாவில் ஆளும் காங்கிரஸ் கட்சியும் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்த மாற்றங்கள், தெலங்கானா மாநிலத்தில் வணிகச் செயல்பாடுகளை மேம்படுத்துவதோடு, தொழிலாளர் நலனையும் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 07.07.2025 முதல் 13.07.2025 வரை )**

**ஜோதிடர்**
**எஸ். விஜயநரசிம்மன், மதுரை.**

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

மேஷம்
(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்–பரணி-1, 2, 3, 4 பாதங்கள்–கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் அரசு பதவியில் உள்ளவர்கள் தங்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, தங்கள் பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்திற்கு நல்லது. தொழிலில் உற்பத்தி பாதிப்புகள் ஏற்படலாம். ஆயினும், எதிர்பார்த்த இனங்களில் நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீடு, கடை வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். திடீர் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும்.

பரணி --

இந்த வாரம் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். சிலருக்கு ஆடம்பரச் செலவுகள் காரணமாக பண கவலைகள் ஏற்படும். அச் சமயங்களில், உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். அரசுப் பணியாளர்களுக்கு உயர் அதிகாரிகளால் நன்மைகள் ஏற்படும். அவர்களின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். எடுத்த காரியங்களில் தடைகள், வீண் அலைச்சல்கள் ஏற்படும். சிலருக்கு எதிரிகள் பணமும் வந்து சேரும். தொழிலில் எதிர்பார்த்தபடி ஆதாயங்கள் ஏற்பட்டு பொருளாதார உயர்வில் சிறப்பு ஏற்படும். பூஜை வழிபாடுகள் மூலம் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். பயணத்தின் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் நல்ல மனிதர்களின் தொடர்புகள் மனதில் மகிழ்ச்சியும், அமைதியும் நிலவும். வாழ்க்கையில் உங்கள் திறமையால் நல்ல முன்னேற்றங்களை அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். வியாபாரத்தில் புதிய திட்டங்களைத் தீட்டி இலாபத்தை அதிகரிக்க முயல்வீர்கள். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். அடிக்கடி கோபப்படுவது குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தாய்வழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். எதிரிகளை சுலபமாக வெல்லும் திறன் ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4- பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் விருந்தினர் வருகையால் வீட்டில் சந்தோஷம் பெருகும். சினிமா, பொழுது போக்குகள் எனச் செலவுகளுக்கும் குறைவிருக்காது. தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். குழந்தைகளுக்குச் செலுத்த வேண்டிய கல்லூரிக் கட்டணங்களுக்கான வங்கி உதவிகளுக்கு முயற்சித்தால் தேவையான கடன் உதவிகள் வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள். கோபத்தை அடக்கிக் குடும்பத்துடன் அனுசரித்துப் போவது நல்லது. அரசாங்கத் துறை மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சில விஷயங்களில், சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது உறுதி.

ரோகிணி –

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும். புதிய சாதனைகள் புரிந்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவார்கள். தன வருமானம் கூடும். வியாபாரிகளுக்கு வியாபாரம் விஷயமான நற்செய்திகள் வரும். விற்பனைத் திறமைகளைக் காட்டி தங்கள் இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். அரசு அதிகாரிகள் சந்திப்பு அனுகூலமாக இருக்கும். புதிய பெண்களின் நட்பு மனக் களிப்புத் தரும். மனைவியிடம் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்கவும். சிலருக்கு மன சஞ்சலங்கள், அலைச்சல்களும் ஏற்படலாம். திடீர் செலவுகள் அதிகரிக்கும். வாரக் கடைசியில் புதிய முயற்சிகள் மூலம் தனவரவு அதிகரித்து எல்லாம் நன்மையாகவே நடக்கும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான பணவரவு அதிகரித்து மனமகிழ்ச்சி கூடும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும், பெரிய மகான்களின் தரிசனம் கிடைக்கும். பணிபுரியும் நண்பர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். சாதுக்களின் தரிசனம் மற்றும் புண்ணிய கதைகள் கேட்டல் என பொழுது பக்தி மயமாக கழியும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். சிலருக்கு வியாபாரப் போட்டிகள் மூலம் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். விற்பனைப் பிரதிநிதிகள் தங்கள் தனித்திறமைகள் புதிய இலக்குகளை எட்டி அதிக இன்செண்டிவ், பாராட்டு பெறுவர்.

## மிதுனம்

(மிருகசீரிடம்- 3,4 பாதங்கள், திருவாதிரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் இறை தரிசனத்தால் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் அடைவீர்கள். உங்களுக்குப் பணம் சம்பாதிப்பதில் எப்போதும் இல்லாத அளவுக்கு ஊக்கம் ஏற்படும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலமான நடவடிக்கைகளால் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்க தாமதம் ஏற்படும். சிலருக்கு பூமி, வீடு என அசையாச் சொத்துக்கள் சேரும். காவல்துறை மற்றும் இராணுவப் பணியாளர்கள் பல சாகசங்களை நிகழ்த்துவர். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்த்தால் மனக் கசப்புகள் தவிர்க்கலாம். அரசு பணிபுரியும் பெண்கள் அதிகாரிகளிடம் அனுசரித்து சென்றால் முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

திருவாதிரை –

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். வேலையில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். பிறந்த நாள் விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். சிலருக்கு அரசு வகைத் தொல்லைகள் ஏற்படும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் உங்களுக்கு இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். எறும்பை ஒத்த, உங்கள் சுறுசுறுப்பு மிக்க செயல்பாடுகளை கண்டு அனைவரும் பாராட்டுவர். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து, எதிர்பார்த்தபடி தனவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடமிருந்து வெகு நாளாக எதிர்பார்த்திருந்த அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் தடங்கலின்றி வந்து சேரும். சினிமா, கேளிக்கை விடுதிகள் என ஆரவாரம் மிக்க சூழலில், மகிழ்ச்சி பொங்க, விருந்து உபசாரங்களும் கலந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகும். வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி கரமான சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். விருந்தினர் வருகை ஆனந்தம் அளித்தாலும், செலவுகள் அதிகரிக்கும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் உங்களுக்கு நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம். பண விஷயங்களில் யாரையும் நம்பி ஏமாறாமல், மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. தீவிர முயற்சிக்குப் பின், இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்களும் பயணத்தில் துன்பமும் ஏற்படும். கடன் கொடுத்தவர்கள் கெடுபிடி செய்வார். தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் யாவும் அனுகூலமாக முடியும். தொடர் முயற்சி காரணமாக, வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

பூசம் --

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். மனதுக்குப் பிடித்த மங்கையுடன் நட்பு ஏற்படும். கோடை விடுமுறையில் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பலன்களை அடைவார்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். ஆயினும், எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம்.

ஆயில்யம் –

இந்த வாரம் தொலை தூரச் சுபச்செய்திகள் எதிர்பார்க்கலாம். பெரியவர்கள் உதவியால் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். அரசுப் பணியில் பதவி உயர்வு எதிர்பார்க்கலாம். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். வேலைப்பளு காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் உங்களுக்கு பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வழி உறவுகளால் நன்மைகள் பல ஏற்படும். நல்ல குரு வாய்க்கப் பெற்று அனைத்து வழிகளிலும் அறிவுத் தெளிவு ஏற்படும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்தபடி அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைத்துப் புகழும் ஓங்கும்.. வாக்கு வன்மை ஓங்கி, அதன் மூலம். ஆதாயம் அடைவீர்கள். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

பூரம் –

இந்த வாரம் நீங்கள் முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். வீட்டிலும் வெளியிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். உங்கள் தேவை அறிந்து, நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் வெற்றிகரமாக முடியும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். பணிபுரியும் பெண்கள் தங்கள் அலுவலகத்தில் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை சுலபமாக அடைவீர்கள்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். சிலருக்கு புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். அதன் காரணமாக சுபச்செலவுகள் கூடி, அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். அரசு பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். சில நேரங்களில் சுறுசுறுப்பான நிலை நிலவும்.

அஸ்தம் –

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பரிபூர்ண ஒத்துழைப்பு கிடைக்கும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரும். சுபகாரிய செலவுகள் ஏற்படும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத தன வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். வாடிக்கையாளரிடம், நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். பிரபலமானவர்களின் அன்பும், நட்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் சுபகாரியங்களுக்கான நிகழ்ச்சியால் இல்லமே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும், வியாபார சம்பந்தமான பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தரும சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டும் கிடைக்கும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் பணியில் இட மாற்றங்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

சுவாதி –

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். நல்ல புத்திர பாக்கியம் ஏற்பட்டு குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அரசு பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். ஞானிகள் மற்றும் பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். பக்கத்து வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் சம்பாதிக்கும் திறன் மேம்படும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் எதிர்பார்க்கலாம். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். அதன் காரணமாக தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். சில மாணவர்கள் மிகப் பெரிய சாதனைகளை புரிவார்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் திருமணம் கைகூடி வரும். பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும்.

அனுஷம் –

இந்த வாரம் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. வியாபாரத்தில் கடின உழைப்பால் மட்டுமே நல்ல இலாபமோ, அதிக பலனோ கிடைக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

கேட்டை –

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பெண்களுக்கு பணியிடத்தில் மற்றவர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். தங்கள் சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் எதிர்பார்க்கலாம்.. ஏமாற்றத்தை தவிர்க்க வியாபாரிகள் தங்கள் கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். சிலருக்கு எல்லா விஷயத்திலும் ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். உயர்ந்த மனிதர்களின் நட்பு கிடைத்து வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் உழைப்பால் உற்பத்தி பெருகி இலாபம் அதிகரிக்கும்.

பூராடம் –

இந்த வாரம் வாழ்க்கையில் எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும். உடன் பிறப்புக்களின் மூலம் நீங்கள் எதிர்பார்க்கும் பண உதவிகள் கிடைக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். பதவி உயர்வு எனும் காற்று உங்கள் பக்கம் வீசும். துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்றபடி, உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். வீண் செலவுகளை குறைத்து பணத்தை சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். வீட்டில் வசதிகளைப் பெருக்கி கொள்வீர்கள்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல்ல ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்ப்பு படி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4- பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப்பங்கள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும். புண்ணிய ஸ்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. சிலருக்கு சோம்பேறித்தனம் அதிகரிக்கும்.

திருவோணம்-

இந்த வாரம் சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நெருங்கிய உறவுகள், அன்பு நண்பர்கள் அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் கோடை விடுமுறைக்கு கொடைக்கானல் போன்ற மலை பிரதேசத்திற்குச் சென்று மனம் மகிழ்வார். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் செல்வ நிலையும் உயரும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் அன்னையின் அன்பும் அரவணைப்பும் உற்சாகத்தைத் தரும். சிலர் கோடைக் கொண்டாட்டமா குடும்பத்துடன் இன்பச் சுற்றுலாக்கள் சென்று மகிழ்வர். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிலருக்கு அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் ஏற்படும். அரசு ஊழியர்களுக்குக் கீழே பணிபுரிபவர்களை கட்டளை இடும் படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். அவர்கள் மேற்படிப்புக்கான புதிய கல்லூரிகளைத் தேடி அலையும் படியான நிலை ஏற்படும். கல்விச் செலவுகள் கூடும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபச் செய்திகள் மூலம் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க, அனுசரித்துச் செல்வது நல்லது. ஒளிமயமான எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். அன்பு உறவுகள் வருகையால் ஆனந்தம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். கோடைகாலப் பயணங்கள் குளுமை தரும்.

சதயம்-

இந்த வாரம் உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். எதிர்பாராத தனவரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். போதுமான தனவரவு இருக்கும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். அன்புமிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். வியாபாரிகள் நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால் அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். அதில் வெற்றியும் அடைவர். நல்லவர்களுடன் தொடர்புகள் ஏற்பட்டு மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பணவரவு அதிகரிப்பால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும் வழக்குகளில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். விஐபி களின் நட்பின் மூலம் ஆதாயங்கள் பெறும் நிலை உருவாகும். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சி தனை அனுபவிப்பீர்கள். உங்கள் இல்லத்தில் நீண்ட இடைவேளைக்குப் பிறகு மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும். ஆழ்ந்த மனக்கவலைகள் கூட அன்பு மனைவியின் அரவணைப்பால் குறையும். விடுமுறைக் காலமாதலால் வீட்டில் குழந்தைகளின் சேட்டை, செயல்பாடு கண்டு உங்கள் முகத்தில் புன்னகையும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். வியாபார விரிவாக்கத்தால் கிடைக்கும் இலாபம் சிறப்பானதாக இருக்கும். மாணவர்கள் புதிய கல்லூரிக் கனவுகள் காண்பர். விடுமுறைக் காலத்தை முகநூல் மற்றும் இணையதளங்களைப் பார்ப்பதில் மகிழ்ச்சி அடைவர். அரசியல்வாதிகள் தங்கள் சார்ந்தவர்களுக்கு நல்லது செய்வதன் காரணமாக புகழ் பெறுவர். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்வது நல்லது.

ரேவதி-

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ரக வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். வீட்டில் திருமணம் போன்ற சுப மங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.



சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடி கல்யாணபுரத்தில் இளைஞரணியின் கலைஞர் நூலகத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். இதில் வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., துணைசெயலாளர் ஜோயல், இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.



அ.ம.மு.க.வை சேர்ந்த மாவட்ட செயலாளர் பேராசிரியர் ஜெயபால், கே.எஸ்.சுப்பு உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. முன்னிலையில் கடந்த 2 தினங்களுக்கு முன்பு தங்களை அ.தி.மு.க.வில் இணைத்துக்கொண்டனர். மேலும் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் நேற்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சேலத்தில் அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

# திருச்செந்தூர் கோவிலில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

அதேநேரத்தில் மூலவர், சண்முகர், வள்ளி, தெய்வானை, பெருமாள், நடராஜர் மற்றும் அனைத்து பரிவார மூர்த்தி சுவாமிகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. கும்பாபிஷேக ஏற்பாடுகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. பக்தர்கள் எந்தவித நெருக்கடியும் இன்றி விழாவை காணும் வகையில் கோவில் கடற்கரையில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு உள்ளன. அங்கு பாதுகாப்பு கருதி மின் விளக்குகள் மற்றும் கண்காணிப்பு கோபுரங்களும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. அதேபோல் கும்பாபிஷேகத்தை பல்வேறு இடங்களில் இருந்து பக்தர்கள் நேரலையில் காணும் வகையில் எல்.இ.டி திரைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

பக்தர்கள் மீது புனிதநீர் தெளிப்பதற்காக டிரோன் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. மொத்தம் 20 டிரோன்கள் இதற்காக தயார் நிலையில் உள்ளன. இதன் செயல்பாடுகளை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட்ஜான் நேரில் பார்வையிட்டார். மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகள், போலீஸ் கட்டுப்பாட்டு அறையையும் ஆய்வு செய்தார். பாதுகாப்பு பணியில் 6 ஆயிரம் போலீசார் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பக்தர்கள் வசதிக்காக பல்வேறு ஊர்களில் இருந்து திருச்செந்தூருக்கு சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகின்றன. இதற்காக திருச்செந்தூரில் 3 தற்காலிக பஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து உயர்வு

மேட்டூர், ஜூலை 07-

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 40,500 கன அடியாக அதிகரித்துள்ளது.

நேற்று (ஜூலை 6) காலை 8 மணி நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர்மட்டம் 120 அடியாக இருந்தது.

அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 40,500 கன அடியாக உள்ளது.

அணையில் இருந்து நீர் மின் நிலையங்கள் வழியாக விநாடிக்கு 22, 200 கன அடி வீதமும், உபரி நீர் போக்கி வழியாக விநாடிக்கு 17,800 கன அடி வீதமும் மொத்தமாக 40,000 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு மேல் மட்ட மதகுகள் வழியாக விநாடிக்கு 500 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

மேட்டூர் அணையிலிருந்து விநாடிக்கு 40,000 கன அடி நீர். வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 93.47 டி.எம்சியாக உள்ளது.




மதுரை மாவட்டம் விளாச்சேரியில் தமிழறிஞர் பரிதிமாற் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது நினைவு இல்லத்தில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாலையணிவித்து மரியாதை செய்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி ஆகியோர் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று ஏ.சி.எஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ’இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48’ திட்டத்தில், 4 லட்சமாவது பயனாளியை நேரில் சந்தித்து, நலம் விசாரித்து, அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

# தலைக்கவசங்களுக்கு இனி பி.ஐ.எஸ். தரச்சான்று கட்டாயம்: மத்திய அரசு

சென்னை, ஜூலை 07-

பி.ஐ.எஸ். தரச் சான்று பெற்ற தலைக்கவசங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என நுகர்வோருக்கு மத்திய அரசு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இதுகுறித்து மத்திய நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், ‘இந்திய சாலைகளில் 21 கோடிக்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளதால், வாகன ஓட்டிகளின் பாதுகாப்பு மிக முக்கியமானது. மோட்டார் வாகனச் சட்டம்-1988-ன் கீழ் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தலைக்கவசம் அணிவது கட்டாயமாகும். அந்த தலைக்கவசங்களுக்கு, செயல்திறன் தர மதிப்பீடும் உள்ளது.

தரமற்ற தலைக்கவசங்கள் பாதுகாப்பு அம்சங்களை விட்டுக் கொடுத்து விடுவதால் சாலைப் பாதுகாப்பு என்ற நோக்கத்தை சிதைப்பதாக அவை இருக்கின்றன. இதை நிவர்த்தி செய்வதற்காக, 2021-ம் ஆண்டு முதல் தரக் கட்டுப்பாட்டு உத்தரவு அமலில் உள்ளது. இது அனைத்து இரு சக்கர வாகன ஓட்டிகளும் பி.ஐ.எஸ். தரநிலைகளின் கீழ் (ஐஎஸ் 4151:2015) சான்றளிக்கப்பட்ட, ஐ.எஸ்.ஐ. முத்திரையிடப்பட்ட தலைக்கவசங்களை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தரநிலைகளைச் செயல்படுத்த, பி.ஐ.எஸ். அமைப்பு வழக்கமான தொழிற்சாலை மற்றும் சந்தை கண்காணிப்பை மேற்கொள்கிறது. இதன் மூலம் தரமற்ற தலைக்கவசங்கள் உற்பத்தி செய்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தரமற்ற தலைக்கவசங்களை சந்தையில் இருந்து அகற்றுவதன் மூலம், சாலை விபத்தால் ஏற்படும் இறப்புகளைத் தடுப்பதையும், உயர் தர பாதுகாப்பு உபகரணங்களை ஊக்குவிப்பதையும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் 4 லட்சமாவது பயனாளியை சந்தித்து நலம் விசாரித்தார் மா.சுப்பிரமணியன்

சென்னை, ஜூலை 07-

நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் 4 லட்சமாவது பயனாளியை தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேரில் நலம் விசாரித்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று ஏ.சி.எஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், 'இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48' திட்டத்தில், 4 இலட்சமாவது பயனாளியை நேரில் சந்தித்து, நலம் விசாரித்து, அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:- இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தை தமிழ்நாடு முதல்வர் 2021 டிசம்பர் திங்கள் 18ஆம் தேதி தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 500க்கும் மேற்பட்ட அடிக்கடி விபத்துகள் நேர்கின்ற மருத்துவமனைகளாக தேர்ந்தெடுத்து இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த திட்டத்தின்படி, விபத்து நேர்ந்தவுடன், 8 நிமிடங்களுக்குள் ஆம்புலன்ஸ் இந்த இடத்திற்கு சென்றடைந்து, அவசர மருத்துவ தொழில் நுட்ப வியர்களின் உதவியுடன் காயமுற்றவர்களின் உயிர்களை காப்பதற்குரிய முதலுதவிகளை செய்து மருத்துவ உதவிகளை ஆம்புலன்ஸ் வழங்கி உடனடியாக மருத்துவமனைகளில் சேர்க்கின்ற இந்த மகத்தான திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் மக்களுக்கு மிகப் பெரிய அளவில் பயன் பெற்று வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு இதுவரை 3,99,999 என்கின்ற வகையில் ஏறத்தாழ 4 லட்சமாவது பயனாளி ஏ.சி.எஸ். மருத்துவக்கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்து, அவருக்கான மருத்துவ செலவை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது என்கின்ற செய்தியினை சொல்லியிருக்கிறோம் .

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் கணபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், ஏ.சி.எஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சிறப்பு அலுவலர் மரு.தனவேல், (ஓய்வு), முதல்வர் மரு. சீனிவாசாராஜ், இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னை தீவுத்திடலில் சர்வதேச கூட்டுறவு ஆண்டு மற்றும் சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு கூட்டுறவுத்துறை சார்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் மினி மாரத்தான் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலிடம் பிடித்தருக்கு காசோலை மற்றும் பதக்கம் வழங்கி பாராட்டினர். இதில் மேயர் ஆர்.பிரியா, முதன்மைச்செயலாளர் சத்யபிரதசாகு ஆகியோர் உடனிருந்தனர்.

# சென்னையில் மினி மாரத்தான் போட்டி: அமைச்சர் பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூலை 07-

சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு சென்னை தீவுத்திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வில் தமிழக அமைச்சர்கள், சென்னை மேயர் ஆகியோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு தமிழக கூட்டுறவுத்துறை சார்பில் மினி மாரத்தான் போட்டி (06-07-2025) நேற்றுகாலை 05.30 மணியளவில் சென்னை தீவுத்திடலில் நடைபெற்றது,

இப்போட்டியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

'சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம்' மினி மாரத்தானில் பங்கேற்றவர்கள், சென்னை தீவுத்திடலில் இருந்து தொடங்கி வெற்றிபோர் நினைவுச்சின்னம், அண்ணா சதுக்கம், விவேகானந்தர் இல்லம் வரை சென்று மீண்டும் அதே பாதையில் தீவுத்திடல் வந்தடைந்தனர்,

இதில் 18 வயது முதல் 40 வயது உடையவர்கள், மேலும் 40 வயது முதல் அதற்கு மேற்பட்டவர்கள் என இரு பிரிவாக 2000 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் மா. சுப்பிரமணியன் பரிசு வழங்கி பாராட்டினார்.

பெண்கள் பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு காசோலை மற்றும் பதக்கம் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை சத்யபிரதசாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.நந்தக்குமார், கூடுதல் பதிவாளர் (நுகர்பு பணிகள்) ச.பா.அம்ரித், மேயர் பிரியாமற்றும் கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள், துணைப்பதிவாளர்கள், உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வரின் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கீழ் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 1,01,973 மாணவர்களுக்கு வேலை

## தமிழ்நாடு அரசு பெருமிதம்

சென்னை, ஜூலை 07-

முதல்வரின் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் கீழ் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 1,01,973 மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் 1.15 கோடி மகளிர் பயன் பெற்றுள்ளதாகவும், மக்களுடன் முதல்வர் திட்டத்தில் 14,45,109 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித்தன்மை வாய்ந்த இத்திட்டங்கள், பொருளாதாரம், வேளாண்மை, நீர்வளம், கல்வி, சுகாதாரம், ஊரகம், நகர்ப்புர வளர்ச்சி, சமூக நீதி ஆகிய 7 முக்கிய அம்சங்களைக் கருத்தில்கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்து அவற்றின் முன்னேற்றம், திட்டமிடப்பட்ட இலக்கினை அடைவதை உறுதி செய்வதன் மூலம், அவற்றை உரிய காலத்திற்குள் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர ஆவன செய்வதே இந்தச் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறையின் முக்கியப் பணியாகும்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டு, அவரது கடும் உழைப்பின் மூலம் சிறப்பான பல வெற்றிக் கனிகளைப் படைத்து வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 30-க்கும் மேற்பட்ட துறைகளில் 2,59,072 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் தொடர்பான குறுகிய காலத் திறன் பயிற்சிகளை வழங்கியுள்ளது.

முன்கற்றல் அங்கீகாரம் என்பது, அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் ஆகும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பல முகாம்களை நடத்தி கட்டுமானத் துறை, தளவாடம், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்(SME), தோல் மற்றும் நூல் தொழில் துறைகள் ஆகியவற்றில் வேலை செய்யும் 1,13,940 தொழிலாளர்களுக்கு முன் கற்றல் அங்கீகார (RPL) சான்றிதழ்களை வழங்கியுள்ளது.

கல்விக்கும், வேலை வாய்ப்புகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்பும் திட்டமே நான் முதல்வன் திட்டம். 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலினின் பிறந்த நாளன்று, அவர்களால் தொடங்கப்பட்ட இந்த நான் முதல்வன் திட்டம், தமிழ்நாட்டில் உயர்கல்வியை மாற்றியமைக்கக்கூடிய ஒரு மாபெரும் வெற்றித் திட்டமாக இளைஞர்களுக்குப் பயனளித்து வருகிறது. மொத்தமாக, இத்திட்டத்தின் கீழ் 41,38,833 மாணவர்களும், 1,00,960 விரிவுரையாளர்களும் பயிற்சி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு ஆண்டுகளில், 272 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்கள் வாயிலாக மொத்தம் 2,60,682 மாணவர்களில் 63,949 மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புகள் பெற்றுள்ளனர். உயர்கல்வி படிப்பதற்குப் பாலம் அமைக்கும் உயர்வுக்குப்படி (பள்ளிகள்) 2023 மற்றும் 2024 “நான் முதல்வன் உயர்வுக்குப்படி ”திட்டம் 77,752 மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் சேர வழிவகை செய்துள்ளது. இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.